بسم الله الرحمن الرحيم    نحمده ونصلي على رسوله الكريم    وعلى عبده المسيح الموعود

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 38

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

28 முஹர்ரம் 1442 ஹிஜ்ரி கமரி 17 தபூக் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
17 செப்டம்பர் 2020


## அல்லாஹ்வின் கட்டளை

وَالَّذِيۡنَ اٰمَنُوۡا وَعَمِلُوا الصّٰلِحٰتِ سَنُدۡخِلُهُمۡ جَنّٰتٍ تَجۡرِىۡ مِنۡ تَحۡتِهَا الۡاَنۡهٰرُ خٰلِدِيۡنَ فِيۡهَاۤ اَبَدًا

நம்பிக்கை கொண்டு நற்செயல் செய்பவர்களை நாம் கீழே ஆறுகள் ஓடுகின்ற தோட்டங்களிலே கட்டாயம் நுழையச் செய்வோம். அவர்கள் அவற்றில் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பர். (4:58)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**துஆவின் கடமைகளுள் முதலாவதாக அவசியமானது நற்செயல்களையும் நம்பிக்கையையும் உருவாக்க வேண்டும் என்பதாகும். எவர் தனது நம்பிக்கையை சரி செய்யாமலும் நற்செயல்களை பேணாமலும் துஆ செய்வாரோ அவர் இறைவனை சோதிக்கின்றார்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உண்மையான இயற்கைச் சட்டத்தில் எப்போதும் துஆவுடன் தொடர்பு உள்ளது. உண்மையான ஞானத்தை அறியாத இன்றைய இயற்கைவாதிகளின் முழுத் தேடலின் விளைவும் ஐரோப்பிய சமுதாயத்தை காப்பி அடிப்பதாகும். அவர்கள் துஆவை ஒரு பித்அத்தாக அதாவது புதுமையாக கருதுகின்றனர். எனவே துஆவைப் பற்றி சுருக்கமாக வாதிடுவது பொருத்தமானதாக தெரிகின்றது.

பாருங்கள். ஒரு குழந்தை பசியினால் நிம்மதியிழந்தவாறும் அமைதி இழந்தவாரும் இருக்கும்போது தாயின் மார்பில் பால் சுரக்கின்றது. ஆனால் குழந்தைக்கு துஆவின் பெயர் கூட தெரிவதில்லை. ஆனால் அதன் அழு குரல் பாலை ஈர்த்து விடுகின்றது. இதற்கு என்ன காரணம்? இது எத்தகைய விஷயம் என்றால், எல்லோருக்கும் இதன் அனுபவம் இருக்கின்றது. சில நேரத்தில் இப்படியும் பார்க்கப்படுகின்றது.

தாய் தனது மார்பில் பால் இருப்பதைப் பற்றி கூட உணர்வதில்லை. சில நேரத்தில் இருப்பதும்கூட இல்லை. ஆனால் குழந்தையின் அழு குரல் தாயின் காதில் படும்போது உடனே பால் சுரந்து விடுகின்றது. குழந்தையின் அந்த கூக்குரலுக்கும் பாலை ஈர்த்து விடுவதற்கு தொடர்பு இருப்பதைப்போன்றே அல்லாஹ்வின் சந்நிதியில் நமது கூக்குரலும் மன்றாடலும் இருந்தால் அது அவனுடைய அருளையும் கருணையையும் பீறிட்டு எழச் செய்கின்றது.

துஆ கபூல் ஆவதன் நிலையில் வருகின்ற இறைவனின் அருளையும் கருணையையும் தன் பக்கம் ஈர்ப்பதாக நான் உணர்ந்தேன். அதை நான் எனது அனுபவத்தின் அடிப்படையில் கூறுகின்றேன். இன்னும் சொல்வதென்றால், நான் அதை பார்த்திருக்கின்றேன். எனவே இன்றைய இருள் நிறைந்த தத்துவவாதிகள் இதை உணர முடியாமல் போனால், பார்க்க முடியாமல் போனால் அதற்காக இந்த உண்மை உலகத்தை விட்டு போய்விடாது. அதிலும் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான முன்மாதிரியை எந்நேரமும் காட்டுவதற்கு நான் ஆயத்தமாக இருக்கும்போது அதை இவர்களால் மறுக்க முடியாது.

பாருங்கள். இறைவன் படைத்திருக்கும் இந்த நாக்கை அவன் பல்வேறு நரம்புகளால் படைத்திருக்கின்றான். அவ்வாறில்லையென்றால் நம்மால் பேச முடியாது. துஆவுக்காக அத்தகைய நாவை அவன் வழங்கி இருக்கின்றான். அது உள்ளத்தின் சிந்தனைகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துகிறது. நாம் துஆவிற்கான பணியை நாவினால் ஒருபோதும் செய்யாவிட்டால் அது நமது துரதிஷ்டமாகும். துஆ எத்தகைய இன்பத்தை வழங்கும் நிலை என்றால் நான் எந்த வகையில் எந்த சொற்களில் அந்த இன்பத்தையும், மகிழ்ச்சியையும் உலகிற்கு புரிய வைக்க முடியும் என எனக்கு மிகுந்த வருத்தம் ஏற்படுகிறது. இதை உணர்வதாலேயே தெரிய முடியும்.

சுருக்கமாக, துஆவின் மீது நம்பிக்கையை உருவாக்க வேண்டும். துஆவின் கடமைகளுள் முதலாவதாக அவசியமானது நற்செயல்களையும் நம்பிக்கையையும் உருவாக்க வேண்டும் என்பதாகும். எவர் தனது நம்பிக்கையை சரி செய்யாமலும் நற்செயல்களை பேணாமலும் துஆ செய்வாரோ அவர் இறைவனை சோதிக்கின்றார். எனவே விஷயம் என்னவென்றால்,

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ அதாவது எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவாயாக என்ற துஆவின் நோக்கம் எங்கள் செயல்களை முழுமையாகவும், நிறைவாகவும் ஆக்குவாயாக என்பதாகும்.

பிறகு صِرَاطَ الَّذِيۡنَ اَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ என்று கூறி மேலும் தெளிவுபடுத்தி விட்டான். அதாவது நீ அருள்புரிந்தவர்களின் வழியை நாங்கள் விரும்புகின்றோம்.

மேலும் உன்னுடைய கோபத்திற்கு ஆளானவர்களின் வழியிலிருந்தும் எங்களை நீ காப்பாற்றுவாயாக. அதாவது எவர்களின் மீது தீய செயல்களின் காரணமாக தண்டனை வந்ததோ அவர்களின் வழியிலிருந்து காப்பாற்றுவாயாக.

اَلضَّآلِّيۡنَ அதாவது வழி தவறியவர்களின் வழியிலிருந்தும் எங்களை காப்பாற்றுவாயாக. மஃலூபி அலைஹிம் என்று கூறி உனது உதவி இல்லாமல் சுற்றித் திரிகின்றவர்களின் வழியிலிருந்தும் எங்களை காப்பாற்றுவாயாக என்ற போதனை வழங்கப்பட்டுள்ளது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 183–185 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**2019–20 ஆண்டுகளுக்கிடையில் அஹ்மதிய்யா ஜமாஅத் மீது இறங்கிய அருட்களின் சுருக்கமாக குறிப்பு**

**அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் முன்னேற்றத்தின் அடி முன்னேறியே உள்ளது**

**அன்னாரது வாதம் வெறும் வாதம் மட்டும் கிடையாது. மாறாக, அல்லாஹ்வின் உதவி மற்றும் ஒத்தாசை அன்னாருடனும் அன்னாருடைய ஜமாஅத்துடனும் இருக்கின்றது. மேலும் உலகின் எந்தவொரு ஆற்றலாலும் அதனை இந்த முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த முடியாது**

**பள்ளிவாசலை கட்டுவது மற்றும் இஸ்லாத்தை பிரச்சாரம் செய்வது போன்ற பணிகளில் பல்வேறு இனத்தைச் சேர்ந்த கலப்பற்றவர்களின் கலப்பற்றத்தன்மை மற்றும தியாகத்தின் வெளிப்பாடு**

**எதிரிகளின் எதிர்ப்புகள் இன்ஷா அல்லாஹ் ஒரு நாள் காற்றில் பறந்து விடும். மேலும் அல்லாஹ்வின் உதவி இன்ஷா அல்லாஹ் நம்முடன் இருக்கும். மேலும் தற்போதும் இருக்கின்றது**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 07 ஆகஸ்ட் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஸஹுர்** மாதம் **07 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ- اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

يُرِيْدُوْنَ لِيُطْفِـُٔوْا نُوْرَ اللّٰهِ بِأَفْوَاهِهِمْ وَاللّٰهُ مُتِمُّ نُوْرِهٖ وَلَوْ كَرِهَ الْكٰفِرُوْنَ ۝ هُوَ الَّذِيْٓ أَرْسَلَ رَسُوْلَهٗ بِالْهُدٰى وَدِيْنِ الْحَقِّ لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ كُلِّهٖ وَلَوْ كَرِهَ الْمُشْرِكُوْنَ ۝

இந்த வசனங்களின் பொருள், அவர்கள் அல்லாஹ்வின் ஒளியை தனது வாயால் ஊதி அணைத்து விட விரும்புகின்றனர். ஆனால் அல்லாஹ் எல்லா நிலையிலும் தனது ஒளியை முழுமை செய்யக்கூடியவன் ஆவான். நிராகரிப்பாளர்கள் வெறுத்தாலும் சரியே. அவனே தனது தூதரை நேர்வழியுடனும், உண்மையான மார்க்கத்துடனும் அனுப்பினான். அவன் தனது மார்க்கத்தை மற்ற அனைத்து மார்க்கத்தை விட மேலோங்கச் செய்வதற்காக அவ்வாறு செய்துள்ளான். இணை வைப்பவர்கள் அதை வெறுத்தாலும் சரியே. **(61:9,10)**

இன்று ஆகஸ்ட் 7 ஆம் தேதி ஆகும். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் யூ.கேவின் காலண்டர் அடிப்படையில் இன்று ஜல்ஸா ஸாலானாவின் வின் முதல் நாளாகும். ஆனால் தற்போது முழு உலகிலும் பரவியுள்ள தொற்று நோயின் காரணமாக இந்த ஆண்டு ஆண்டு மாநாட்டை நடத்த முடியவில்லை. அல்லாஹ் விரைவில் நிலைமைகளை இயல்பு நிலைக்கு திரும்பச் செய்வானாக. மேலும் எப்பொழுதும் நாம் நடத்தி வந்ததுபோன்று அனைத்து மரபுகளுடனும் ஆண்டு மாநாட்டை நாம் நடத்துவதற்கு வழிவகை செய்வானாக. ஒருவர் மற்றவரை சந்தித்து அன்பு மற்றும் சகோதரத்துவத்தை அதிகரிக்கச் செய்யட்டுமாக. மேலும் ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளைக் கேட்டு அறிவார்ந்த மற்றும் ஆன்மீக நிலைகளை மேம்படுத்திக் கொள்ள இறைவன் வழிவகை செய்வானாக.

எவ்வாறிருப்பினும் இந்த குறையை நீக்குவதற்கு MTA ஓர் அளவிற்கு முயற்சி செய்துள்ளது. கடந்த வருடம் பல்வேறு நாடுகளில் ஆண்டு மாநாடுகளில் நான் நிகழ்த்திய சொற்பொழிவுகளை ஒளிபரப்ப நிகழ்ச்சிகளை வடிவமைத்துள்ளது. அதேபோன்று சில நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சிகளும் நடைபெறும். இது ஜமாஅத் உறுப்பினர்களின் மார்க்க மற்றும் அறிவார்ந்த நிலைகளின் தாகத்தை தணிப்பதற்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். இன்ஷா அல்லாஹ். எனவே வீட்டில் அமர்ந்து கொண்டு இந்த மூன்று நாள் நிகழ்ச்சிகளை குறிப்பாக கவனம் செலுத்தி பார்க்கவும். அத்துடன் எனக்கு இந்த விஷயமும் நினைவிற்கு வந்தது. அதாவது அல்லாஹ் ஆண்டு முழுவதும் ஜமாஅத்தின் மீது அருள் செய்கின்றான். கடந்த வருட அறிக்கையை முன் வைப்பதற்கு பகரமாக இந்த வருடம் புத்தம் புதிய அறிக்கையை MTA வில் எடுத்து வைக்க வேண்டும் என்று நான் எண்ணினேன். ஏனென்றால் இதன் மூலம் ஜமாஅத் உறுப்பினர்களின் ஈமானை அதிகரிப்பதற்கு அது காரணியாக அமையும்.

கடந்த ஆறு, ஏழு மாதங்களாக நிலவி வரும் இந்த நிலைமைகளுக்கு பின்னரும் அதாவது சில பணிகளை நாம் வெளியில் சென்று செய்திருந்தால் இன்னும் நல்ல முறையில் செய்திருக்க முடியும். ஆனால் செய்ய முடியவில்லை. இருப்பினும் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் முன்னேற்றம் அதிகரித்தே வருகின்றது. குறிப்பாக பெரும்பாலான மக்கள் எனக்கு எழுதுகின்றார்கள். அதில் தர்பிய்யத் மற்றும் ஜமாஅத் தொடர்பில் சிறப்பான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. எனவே அந்த அடிப்படையில் எங்களிடமும் உங்களது பிள்ளைகளிடமும் ஜமாஅத்துடனான தொடர்பில் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று பலரும் எழுதியுள்ளார்கள். எவ்வாறிருப்பினும் நான் ஏற்கனவே கூறியதுபோன்று அதாவது ஜல்ஸாவின் இரண்டாவது நாளன்று முந்தைய ஆண்டுகளில் நான் முந்தைய ஆண்டின் அறிக்கையை எடுத்து வைத்து வந்தேன். ஆனால் நேரத்தில் குறைபாட்டின் காரணமாக அதனுடைய பெரும் பகுதி எஞ்சிவிடும். முழுமையான அறிக்கையை எடுத்து வைக்க முடியாமல் போய்விடும். இந்த முறை சிறிது நேரமும் கிடைத்திருக்கின்றது.

எனவே ஜுமுஆ குத்பாவிலும் அந்த அறிக்கையின் சில பகுதியை எடுத்து வைக்க நான் முடிவு செய்துள்ளேன். பின்னர் அதன் சில பகுதியை ஞாயிற்றுக்கிழமை மாலை இங்கிருந்து ஹாலில் நேரடி நிகழ்ச்சி மூலமாக ரிப்போர்ட்டை எடுத்து வைப்பேன். ஒருவேளை இன்றைய குத்பாவிலும், நாளைய மறுநாள் நமது நிகழ்ச்சியின் அடிப்படையில் சொற்பொழிவின் மூலமாகவும் முழுமையான அறிக்கையை முன் வைக்க முடியாமல் போய்விடக்கூடும். எனினும் ஈமானை வலுவூட்டக்கூடிய சம்பவங்கள் முன் வைக்கப்படும். இன்ஷா அல்லாஹ். அந்த அறிக்கையின் குறிப்பான அம்சங்களை எடுத்துரைப்பதற்கு முன்னர் நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள் ஒன்றை எடுத்துரைப்பேன். நான் ஓதிய வசனங்களின் விளக்கவுரையாக அது அமைந்துள்ளது. இனி இஸ்லாத்தின் பிரச்சாரமும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்குரிய அந்த காலமும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களையே சார்ந்திருக்கின்றது என்ற

விஷயத்தை அன்னார் மிகத் தெளிவாக விளக்கி அறிவிப்பு செய்துள்ளதும் தெரிய வருகிறது. மேலும் அனைத்து எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அன்னாரின் இந்த ஜமாஅத் வளரும், மலரும், பரவும். இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும்.

நான் எடுத்து வைக்க இருக்கின்ற அறிக்கைகளும், சம்வங்களும் சுயமே இதற்கு சான்று பகரக்கூடியதாக இருக்கின்றது. அதாவது அன்னாரின் வாதம் வெற்று வாதமாக இருக்கவில்லை. மாறாக, அல்லாஹ்வின் உதவியும் ஒத்தாசையும் அன்னாருடனும், அன்னாரின் ஜமாஅத்துடனுமே உள்ளது. மேலும் உலகின் எந்த சக்தியும் அதன் முன்னேற்றத்தை தடுக்க முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இருபது ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு இந்த திருக்குர்ஆன் வசனம் இல்ஹாமாக இறங்கியது.

هُوَ الَّذِیۡۤ اَرۡسَلَ رَسُوۡلَہٗ بِالۡہُدٰی وَدِیۡنِ الۡحَقِّ لِیُظۡہِرَہٗ عَلَی الدِّیۡنِ کُلِّہٖ

அதாவது அவன் தனது மார்க்கத்தை மற்ற அனைத்து மார்க்கத்தை விட மேலோங்கச் செய்வதற்காக அவ்வாறு செய்துள்ளான். இணை வைப்பவர்கள் அதை வெறுத்தாலும் சரியே.

இந்த இல்ஹாம் தொடர்பாக எனக்கு இந்த விளக்கம் புரிய வைக்கப்பட்டது. அதாவது நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டிருக்கின்றேன். எனது கரங்களின் மூலமாக இறைவன் இஸ்லாத்தை அனைத்து மார்க்கங்களின் மீதும் மேலோங்கச் செய்வான். மேலும் இங்கு ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இது திருக்குர்ஆனின் ஒரு மகத்துவமிக்க முன்னறிவிப்பாகும். இது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கரங்களால் முழுமையாகும் என்று ஆராய்ச்சியாளர்களான ஆலிம்கள் இதனை ஒப்புக் கொள்கின்றனர். எனவே உலகில் எந்த அளவுக்கு இறை நேசர்களும், அப்தால்களும் தோன்றி இருக்கின்றனரோ அவர்களில் எவரும் இந்த முன்னறிவிப்பிற்கு தன்னை பொருத்தமானவராக ஆக்கிக் கொள்ளவில்லை. மேலும் மேற்குறிப்பிட்ட இந்த வசனத்தில் கூறப்பட்ட விஷயங்கள் தன்னைக் குறித்து வந்துள்ளன என்று எவரும் வாதிடவும் இல்லை. மேலும் இந்த வசனத்தை உண்மைப்படுத்தக் கூடியவர் நீர்தான் என்றும், உமது கரத்தின் மூலமாகவும், உமது காலத்திலும் மற்ற மார்க்கங்களின் மீது இஸ்லாமிய மார்க்கத்தின் மேன்மைகள் நிரூபணமாகும் என்றும் இறைவன் என்னிடம் கூறியுள்ளான்.

(தர்யாக்குல் குலூப், ரூஹானீ கஸாயின் தொகுதி 15 பக்கம் 231,232 அடிக்குறிப்பு)

பின்னர் அன்னார் கூறுகின்றார்கள்: இஸ்லாம் மட்டுமே உயிருள்ள மார்க்கமாகும். இஸ்லாத்தில் மட்டுமே எப்போதும் வசந்த காலம் வருகின்றது. அதன் மரங்கள் பசுமையாக இருக்கின்றன. மேலும் இனிப்பான சுவையான கனிகளை அது தருகின்றது. இஸ்லாத்தை தவிர்த்து வேறு எந்த மார்க்கமும் இந்த சிறப்பை கொண்டிருக்கவில்லை. இஸ்லாத்தின் சிறப்புகளிலிருந்து இந்த சிறப்பை எடுத்து விட்டால் பின்னர் அதுவும் மரணித்த மார்க்கமாக ஆகிவிடும். ஆனால் அவ்வாறில்லை. இஸ்லாம் உயிருள்ள மார்க்கமாகும். அல்லாஹ் எல்லா காலகட்டத்திலும் அதன் உயிரோட்டத்திற்கான சான்றுகளை வழங்கியுள்ளான்.

எனவே இந்த காலகட்டத்திலும் அவன் தனது அருளால் இந்த ஜமாஅத்தை நிறுவியுள்ளான். ஏனென்றால் இஸ்லாம் உயிருள்ள மார்க்கமாக இருப்பதற்கு இந்த ஜமாஅத் சாட்சியாக இருக்க வேண்டும். மேலும் இறை ஞானம் அதிகரிக்க வேண்டும் என்பதற்காக இறைவன் இந்த அமைப்பை நிறுவியுள்ளான். மேலும் பாவத்தையும், அசுத்தத்தையும் எரித்து சாம்பலாக்கி நன்மை மற்றும் பரிசுத்தத்தை பரப்பும் வகையில் நம்பிக்கை ஏற்படுவதற்காகவும் இறைவன் இவ்வாறு செய்துள்ளான்.

(மல்ஃபூஸாத் தொகுதி9 பக்கம் 154,155 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

இந்த மேற்கோள்களுக்குப் பிறகு இப்போது நான் அறிக்கையின் சில பகுதிகளை முன் வைப்பேன். அல்லாஹ்வின் அருளால் இந்த வருடம் உலகம் முழுவதும் பாகிஸ்தானைத் தவிர்த்து நிலைபெற்றுள்ள ஜமாஅத்துகளின் எண்ணிக்கை 288 ஆகும். இந்த புதிய ஜமாஅத்துகளைத் தவிர்த்து ஆயிரம் இடங்களில் இன்னும் சொல்வதென்றால், ஆயிரத்தையும் விட கூடுதலாக 1040 இடங்களில் முதல் முறையாக அஹ்மதிய்யத்தின செடி நடப்பட்டுள்ளது. புதிய இடங்களில் ஜமாஅத்தை நிறுவுதல் என்ற அடிப்படையின் பட்டியலில் சிரோலியோன் முதலிடம் வகிக்கிறது. அங்கு 40 புதிய ஜமாஅத்துகள் ஏற்பட்டுள்ளன. அதற்குப் பிறகு கோங்கோ கன்ஷாஸா அங்கு 31 ஜமாஅத்துகளில் நிலை பெற்றுள்ளன. மூன்றாவது இடத்தில் கானா உள்ளது. அங்கு 23 புதிய ஜமாஅத்துகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி இன்னும் ஏராளமான மற்ற நாடுகள் உள்ளன. அங்கு 10,12,8,2,3 என்ற எண்ணிக்கையில் ஜமாஅத்துகள் நிறுவப்பட்டுள்ளன. அதில் கேம்பியா, லைபீரியா, பெனின், ஐவெரிகோஸ்ட், நாயிஜீரியா, செனிகால், கினிபஸாவ், தன்ஸானிய்யா, கினிகனாகரி, டோகோ சவுத், டோமே, கேம்ரூன், துருக்கி, கோங்கோ, பிரேஸில், உகண்டா என்று இதுபோன்று இன்னும் ஏராளமான நாடுகள் உள்ளன.

நமது டோங்கோ ஷாஷாவின் உள்ளூர் முரப்பி மற்றும் முஅல்லிம் ஹமீது அஹ்மது சாஹிப் கூறுகின்றார்கள்:

லோபிசாகு என்ற ஒரு கிராமம் உள்ளது. அங்கு சன்னி இமாம் உஸ்மான் சாஹிப் குஆ ரோடியோவில் நமது தப்லீக் நிகழ்ச்சிகளை கேட்டவுடன் நமது ஜமாஅத்திற்கு வந்து விட்டார். பல்வேறு கேள்விக்கனைகளை தொடுத்தார். அப்போது அவரது அனைத்து கேள்விகளுக்கும் திருப்திகரமான பதில் தரப்பட்டது. மேலும் சவாஹிலி மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட ஜமாஅத் திருக்குர்ஆன் ஒன்றும் அவருக்கு வழங்கப்பட்டது. மேலும் இதர ஜமாஅத் புத்தகங்களும் வழங்கப்பட்டன. அந்த புத்தகங்களை படித்த பிறகு இறை அருளால் அவர் பைஅத் செய்து விட்டார். மேலும் தனது கிராமத்திற்கு திரும்பிச் சென்று ஜமாஅத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதாக அவர் வாக்குறுதி அளித்தார்.

அல்லாஹ்வின் அருளால் அவரது தப்லீக்கின் மூலமாக அந்த கிராமத்தில் 20 நபர்களைக் கொண்ட ஒரு புதிய சிறப்பான ஜமாஅத் அங்கு உருவாகி விட்டது.

அடுத்து கேம்பியாவின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ரமலான் மாதத்தில் ஒரு மண்டலத்தின் முஅல்லிம் சாஹிபும், ஜமாஅத் தலைவரும் தப்லீக் நிகழ்ச்சியை உருவாக்கினார்கள். அதற்காக ஒரு கிராமத்திற்கு சென்றார்கள். அங்கு தப்லீக் நிகழ்ச்சிகளுக்குப் பிறகு உள்ளூரைச் சார்ந்த கிராமவாசி ஒருவர் கூறினார். நான் உங்களின் வருகையால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றேன். ஏனென்றால் நீங்கள் செய்கின்ற இந்த பணிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்திற்கு ஏற்புடையதாகும். ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து தப்லீக் செய்தார்கள்.

ஆப்ரிக்கர்களுக்கென்று ஒரு தனித்தன்மை இருக்கின்றது. அதற்கேற்பவே அவர்கள் உதாரணத்தையும் முன் வைப்பார்கள். ஆக அவர் கூறுவது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்தார்கள். மதீனாவிற்கு வந்தார்கள். அதனால் இஸ்லாம் பரவியது. அதேபோன்று நீங்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளீர்கள். எல்லா இடங்களிலும் இஸ்லாத்தின் பிரச்சாரத்தை செய்து வருகின்றீர்கள். இதுவே சுன்னத்தும் ஆகும். உண்மை இஸ்லாத்தின் பிரச்சாரத்திற்காக நாங்கள் உங்களை வரவேற்கின்றோம். இதுவே சரியான வழிமுறையாகும். மேலும் நீங்கள் எடுத்து வைத்துள்ள இமாம் மஹ்தி (அலை) அவர்களின் போதனையே உண்மை இஸ்லாம் ஆகும். நாங்கள் அனைவரும் ஈமான் கொள்கின்றோம். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவரைப் பற்றி முன்னறிப்பு

செய்திருந்தார்களோ அவர் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள்தான் என்று நாங்கள் நம்புகிறோம்.

இங்கு இறை அருளால் இரண்டு குடும்பங்களைக் கொண்ட மொத்தம் 19 நபர்கள் பைஅத் செய்துள்ளனர். மேலும் அஹ்மதிய்யத்தில் நுழைந்துள்ளனர்.

லாயிபீரியா அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: நமது மிஷ்னரி சாஹிப் குத்பா ஜுமுஆவில் தஹ்ரீகே ஜதீது அடிப்படையில் பொருளாதார தியாகம் தொடர்பான முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். பொதுவாக அங்கு அஹ்மதி அல்லாத சில முஸ்லிம்களும் தொழுகைக்காக வருகின்றனர். எவ்வாறிருப்பினும் அஹ்மதிகள் தங்களது பெயரை எழுதிக் கொண்டிருந்தபோது ஒரு நபர் வந்தார். அவர் 50 லைபீரியன் டாலரைக் கொடுத்தார். மேலும் எதுவும் பேசாமல் மௌனமாக சென்று விட்டார். அவரைப் பற்றி விசாரித்தபோது அவர் அருகிலுள்ள ஒரு கிராமத்தைச் சார்ந்தவர் என்பது தெரிய வந்தது. அவர் குத்பாவைக் கேட்டபோதும் தியாகங்களுக்குரிய சம்பவத்தை செவியுற்றபோதும் அவர் மீது அதன் தாக்கம் ஏற்பட்டது. அவர் சந்தாவும் செலுத்தி விட்டார். இது பற்றி நமது மிஷ்னரிக்கு தெரிய வந்தபோது அவர் அங்கு சென்றார். அவருக்கு நன்றி செலுத்தினார். அவர் அன்னாரை சந்தித்துக் கொண்டிருந்தபோது கிராமத்தின் இதர மக்களும் அங்கு ஒன்றுகூடி விட்டனர். அவர்களும் இந்த விஷயத்தைக் கேட்டபோது மிகவும் தாக்கத்திற்கு ஆளாகினர்.

அந்த கிராமத்திலிருந்த இமாமும் பெரும் தாக்கத்திற்கு ஆளானார். அவர் கூறினார்: நீங்கள் சில நாட்கள் கழித்து மீண்டும் வாருங்கள். நான் இரண்டு மூன்று கிராமங்களை ஒன்று திரட்டுவேன். அங்கு நீங்கள் தப்லீக் செய்யுங்கள் என்று கூறினார். எனவே நிச்சயிக்கப்பட்ட நாளில் நமது தப்லீக் குழு அங்கு சென்றடைந்தது. அங்கு மூன்று கிராமத்து மக்கள் ஒன்றுகூடி இருந்தனர். ஜமாஅத்தின் கொள்கைகள் பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டன. மேலும் ஜமாஅத்தின் நோக்கத்தைப் பற்றிய விளக்கமும் கூறப்பட்டது. அதன் பிறகு ஒரு கேள்வி பதிலுக்கான நீண்ட தொடர் ஆரம்பமானது. அது பகல் முழுவதும் நீடித்தது. எல்லா வகையிலும் மன நிறைவு ஏற்பட்ட பிறகு மூன்று கிராமத்தின் இமாம்களும் தமது மக்கள் அனைவரையும் இணைத்துக் கொண்டு அஹ்மதிய்யத்தில் இணைவதாக கூறினர். அல்லாஹ்வின் அருளால் இந்த மூன்று கிராமங்களிலும் அஹ்மதிய்யத் நிலைநாட்டப்பட்டது.

லைபீரியாவிலிருந்து முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: காலாநிகோர் என்ற ஒரு கிராமத்திற்கு ஜுமுஆ நாளன்று தப்லீக்கிற்காக சென்றோம். நான் ஜுமுஆ தொழுகைக்கு 3 மணி நேரத்திற்கு முன்பாக அங்கு சென்றேன். ஆரம்பகட்ட பேச்சுவார்த்தையில் கிராமத்து மக்கள் ஜுமுஆ தொழுகையை தமது பள்ளிவாசலில் தொழுவதில்லை என்பதும், மாறாக அருகிலுள்ள பெரிய கிராமத்திற்கு ஜுமுஆ தொழ செல்கின்றனர் என்பதும் தெரிய வந்தது. செல்பவர்கள் இரண்டு மூன்று நபர்களாகக் கூட இருக்கலாம். ஆனால் மீதமுள்ளவர்கள் அனைவரும் அல்லது அந்த கிராமமும் முஸ்லிம்களாக இருந்தபோதிலும் ஜுமுஆவின் பரக்கத்துகளிலிருந்து இழப்பிற்குரியவர்களாகவே இருக்கின்றனர் என்பது தெரிய வந்தது. அவர்களிடம் காரணம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் இவ்வாறு பதிலளித்தனர். அதாவது மஸ்ஜிதில் ஜுமுஆ ஆரம்பிப்பதற்கு முன்பு மூன்று ஆடுகள் பலியிடப்படுவது அவசியமாகும். பின்னர் பலியிடப்பட்ட பிறகு அதன் இறைச்சி இமாம் சாஹிபிற்கே வந்தடைய வேண்டும். அதன் பிறகு இமாம் சாஹிப் ஒருவரை இமாமாக நியமனம் செய்வார். அவர் ஜுமுஆவை நடத்துவார் என்று கிராமவாசிகள் கூறினர்.

இது தவறு. இஸ்லாத்தில் இப்படி எந்த நிபந்தனையும் இல்லை என்று அவர்களுக்கு அதிகமாக புரிய வைக்கப்பட்டது. அந்த கிராமத்து மக்கள் சந்தேகம் கொண்டவர்களாகவும், மனித வணங்கிகளாகவும் இருந்தனர். மார்க்கத்தை பற்றிய அறிவு அவர்களுக்கு இருக்கவில்லை. மவ்லவிக்கு கட்டுப்படாமல் இருந்து நாம் பாவம் செய்பவர்களாக ஆகி விடக் கூடாது என்பதே அவர்களின் பெரும் அச்சமாகவும், அபாயமாகவும் இருந்தது. மேலும் அதன் விளைவாக தங்கள் மீது மவ்லவி அச்சமூட்டியதுபோன்று இறை தண்டனை எதுவும் வந்து விடக் கூடாது என்றும் அவர்கள் பயந்தனர். ஆயினும் அவர்களுக்கு அதிகமாக அழுத்தம் கொடுக்கப்பட்டது. எனவே அவர்கள் ஏற்றுக் கொண்டனர். ஜுமுஆ நடத்தப்பட்டது. அதில் அனைவரும் கலந்து கொண்டனர். ஜுமுஆவிற்குப் பிறகு ஜமாஅத்தைப் பற்றிய விரிவான அறிமுகம் செய்யப்பட்டது. கேள்வி பதில் நிகழ்ச்சிகளும் நடந்தன. பொதுவாக அந்த மக்களின் மனதில் இமாம் சாஹிபின் அச்சம் இருந்தது.

எனவே அதைக் கருத்தில் கொண்டு நமது முபல்லிக் சாஹிப் அவர்களிடம் இவ்வாறு கூறினார். இதைக் குறித்து யாராவது உங்களிடம் கேட்டால் ஜுமுஆ நடத்துவதற்கு முன்பாக ஆடுகளை பலி கொடுப்பது அவசியமாகும் என்று எங்கு எழுதப்பட்டுள்ளது என்று மட்டும் கேட்கவும். பின்னர் ஜுமுஆ அங்கு தொழப்பட்டிருக்கின்றது என்பது அந்த மல்விக்கு தெரிந்தவுடன் விசாரிப்பதற்காக அந்த கிராமத்தை வந்தடைந்தார். மிகவும் கோபமடைந்தார். கிராமவாசிகளும் ஆடுகள் பலியிடுவது அவசியம் என்று எங்கு எழுதப்பட்டுள்ளது என்று கேட்டனர். பிறகு உள்ளூர் மிஷனரி சாஹிப் அந்த கிராமத்தின் நபருக்கு ஜுமுஆ தொழுகின்ற வழிமுறையை கற்றுக் கொடுத்தார்.

இப்போது அங்கு முறையாக ஜுமுஆ நடைபெறுகின்றது. மேலும் மக்களும் அந்த மவ்லவியை விட்டு விட்டனர். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத் நமக்கு கற்றுக் கொடுத்ததே உண்மையான இஸ்லாம் ஆகும். அந்த மவ்லவி நமக்கு கற்றுக் கொடுத்தது உண்மையான இஸ்லாம் அல்ல என்று முடிவிற்கு அவர்கள் வந்தனர். மேலும் அல்லாஹ்வின் அருளால் அவர்களில் பெரும்பாலான மக்கள் ஜமாஅத்தில் இணைந்து விட்டனர். அல்லாஹ்வின் அருளால் அங்கு புதிய ஜமாஅத் நிலைநாட்டப்பட்டுள்ளது.

மார்க்கத்தின் பெயரால் இந்த மக்கள் விநோதமான புதுப்புது பித்அத்துகளை உருவாக்கியுள்ளனர். அதேபோன்று குறைந்த அறிவுடைய மக்களையும் அப்பாவிகளையும் இவர்கள் தவறாக வழிநடத்துகின்றனர்.

ஃபிலிப்பைன் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: சாலுபீன் என்ற பகுதி தீவிரவாதத்தை விரும்பும் முஸ்லிம்களின் காரணமாக மிகவும் பிரபலமான பகுதியாகும். அங்கு தப்லீக் ஜமாஅத்தின் செயல்பாடுகளும் மிகவும் வேகமாக உள்ளது. அந்தப் பகுதியில் நமது ஒரு முஅல்லிம் சாஹிபின் மாமனாரின் உறவினர்கள் உள்ளனர். முஅல்லிம் சாஹிப் உறவினர்களுக்கு தப்லீக் செய்தபோது அவர்களிடமிருந்து நேர்மறையான பதில் கிடைத்தது. எனவே தேசிய அளவில் அங்கு தப்லீக் நிகழ்ச்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. மூன்று முஅல்லிம்கள் மற்றும் மூன்று தாயியான்களைக் கொண்ட குழு ஒன்று ஒரு வாரத்திற்கு அந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்டது. பொதுவாக நடப்பதுபோன்று உள்ளூர் முஸ்லிம்கள் புறமிருந்து எதிர்ப்பை எதிர்கொள்ள நேரிட்டது. ஆனால் இந்த எதிர்ப்பிற்குப் பிறகும் கூட அல்லாஹ்வின் அருளால் முப்பது நபர்கள் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தனர்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதர் அனுப்பப்படுவதன் மூலம் வசந்த காலம் வருகின்றது.... இந்த எல்லா அருள்களுக்கும் உண்மையில் அந்த தூதர் தான் காரணமாகத் திகழ்கின்றார். (ஹகீகத்துல் வஹி ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 69)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

செனிகால் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: தாம்பா கண்டால் என்ற ஒரு மண்டலம் உள்ளது. அங்கு நமது தப்லீக் குழு சென்றது. அங்குள்ள ஒரு கிராமத்திற்கு சென்ற பிறகு ஏற்கனவே தீஜானியா மற்றும் முரீதிய்யா என்ற இரு பிரிவுகளுக்கு மத்தியில் விவாதம் நடைபெற்று வருவது தெரிய வந்தது. அங்குள்ள இமாம் நமது குழுவின் ஒரு உறுப்பினரிடம் இந்த இரு பிரிவில் எவரும் உண்மையில் இல்லை. ஏனென்றால் ஒரு உண்மையான இமாம் தோன்ற இருக்கின்றார். நாங்கள் அவருக்காக காத்திருக்கின்றோம். மேலும் நாங்கள் அவரை ஒப்புக் கொள்வோம் என்று கூறினார்.

நமது குழுவினர் தப்லீக் செய்தனர். அப்போது கேள்வி பதில் நிகழ்ச்சியும் நடந்தது. அப்போது நமது குழுவினரிடம் அல் கவ்லுஸ் சரீஹ் ஃபீ ஸஹூரில் மஹ்தி வல் மஸீஹ் என்ற மவ்லானா நஸீர் அஹ்மது அவர்கள் எழுதிய புத்தகமும் யஸ்ஸர்னல் காயிதாவும் இருந்தது. அந்த இரண்டு இமாம்களும் அதனை விலைக்கு வாங்கினர். குழுவினர் தப்லீக் செய்தனர். பின்னர் திரும்பி வந்து விட்டனர். இரண்டு நாட்கள் கழித்து இமாம் ஃபோன் செய்து அழைத்தார். மேலும் எங்களுக்கு மண்டங்கா மொழியில் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது என்று கூறி அதனையும் பெற்றுக் கொண்டார்.

பிறகு இரண்டாவது முறையாக நமது குழு அங்கு சென்றபோது நாங்கள் எந்த மார்க்கத்திற்காக காத்திருந்தோமோ அது அஹ்மத்திய்யத் ஆகும் என்று அவர்கள் நமது குழுவினரிடம் கூறினர். ஏனென்றால் நான் உங்களது புத்தகத்தையும், திருக்குர்ஆனின் மொழியாக்கத்தையும் எங்களது மொழியிலேயே படித்திருக்கின்றோம். இவ்வாறு முழு கிராமமும் அஹ்மதிய்யத்தில் நுழைந்து விட்டது. மேலும் அங்கு ஒரு புதிய ஜமாஅத்தும் நிலைநாட்டப்பட்டது. பின்னர் அங்கு காயிதாக்களும் கொடுக்கப்பட்டன. அவர்கள் திருக்குர்ஆன் ஓத கற்றுக் கொள்வதற்காக திருக்குர்ஆனும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

குவேட்டேமாலா அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: கோபான் என்ற நகரம் இங்கிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஓர் இடமாகும். அங்கு நடப்பு வருடத்தில் முதல் முறையாக ஜமாஅத்தின் அறிமுகம் செய்யப்பட்டது. இரண்டு முறை சுற்றுப் பயணம் செய்து உண்மை இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி எட்ட வைக்கப்பட்டது. மேலும் குவேட்டேமாலா ஆண்டு மாநாட்டிற்கு அவர்களுக்கு அழைப்பும் கொடுக்கப்பட்டது. அவர்களில் ஒரு குடும்பத்தைச் சார்ந்த மூன்று நபர்கள் ஜல்ஸாவில் கலந்து கொண்டனர். மேலும் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டனர். இவ்வாறு ஒரு புதிய ஜமாஅத் அங்கு உருவாகி விட்டது. இப்போது அந்த குடும்பம் மற்ற குடும்பத்தினருக்கு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்து தப்லீக் செய்து வருகின்றது.

செனிகால் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: இங்கு ஒரு மண்டலத்தின் பத்து இடங்களில் உள்ளூர் முஅல்லிம்கள் மற்றும் மிஷனரிகள் மூலமாக வாரத்தில் ஒரு மணி நேரம் ரேடியோ நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது. இதன் வாயிலாக இந்த ஆண்டு இருபது கிராமங்களில் ஜமாஅத் உருவாக்கப்பட்டுள்ளது. மக்கள் அஹ்மதிய்யத்தின் பக்கம் சாய்வது மட்டுமின்றி சுயமே போன் சென்று தங்களிடத்தில் வருமாறு அழைப்பும் கொடுக்கின்றனர்.

கபாபீர் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: அல்லாஹ்வின் அருளால் தெற்கு பாலஸ்தீனத்தின் நகரத்தில் சில ஆண்டுகளாக அஹ்மதிகள் வசித்து வருகின்றனர். எனினும் அங்கு முறையாக ஜமாஅத் ஏற்படுத்தப்படவில்லை. அல்லாஹ்வின் அருளால் இந்த வருடம் அங்கு முறையாக ஜமாஅத் உருவாக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் பகுதியான அல் கலீல் என்ற இடம் உள்ளது. அங்கு ஹஸ்ரத் இப்ராஹீம், ஹஸ்ரத் இஸ்ஹாக் மற்றும் ஹஸ்ரத் யாகூப் மற்றும் அவர்களின் துணைவியார்களின் மண்ணறைகளும் உள்ளன. இது வரலாற்று சிறப்புமிக்க பழைய நகரமாகும். அந்த நகரத்திலும் சுற்றுவட்டாரத்திலுள்ள கிராமத்திலும் 27 அஹ்மதிகள் வசிக்கின்றனர். முறையாக தற்போது அங்கு ஜமாஅத் உருவாக்கப்பட்டுள்ளது. ஓர் அஹ்மதி தனது வீட்டின் ஒரு பகுதியை அங்கு தொழுகை நடத்தப்பட வேண்டும் என்பதற்காக மஸ்ஜிதாக ஒதுக்கிக் கொண்டுள்ளார்கள்.

### புதிய பள்ளிவாசல்கள் கட்டுமானம் மற்றும் ஜமாஅத்திற்கு கிடைத்த பள்ளிவாசல்கள்

அல்லாஹ்வின் அருளால் இதன் ஒட்டுமொத்த எண்ணிக்கை 217 ஆகும். அதில் புதிதாக கட்டப்பட்ட பள்ளிவாசல்கள் 124 ஆகும். 93 ஆயத்தமாக நமக்கு கிடைத்த பள்ளிவாசல்கள் ஆகும். இதில் யூ.கே, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இன்நோநேஷியா, நைஜீரியா, சிரோலியோன், பெனின், பெர்கினோஃபாஸோ, லாயிபீரியா, ஐவெரிகோஸ்ட், கினிபஸாவ், தன்ஸானிய்யா, உகண்டா, மாலி, கோன்கோ கன்ஷாஷா, செனிகால், கேமரூன், கினிகனாகரி, டோகோ, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் அடங்கும். ஏறக்குறைய உலகின் ஒவ்வொரு நாட்டிலும் ஏராளமான நாடுகளிலும் சுமார் மூன்று கண்டங்களிலும் இன்னும் சொல்வதென்றால் நான்கு துணை கண்டங்களிலும் அல்லாஹ்வின் அருளால் நமக்கு பள்ளிவாசலுக்கான நற்பாக்கியம் கிடைத்துள்ளது.

குவேட்டேமாலாவில் 31 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு இரண்டாவது பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. பைஅத்துல் அவ்வல் என்ற பெயர் கொண்ட முதல் மஸ்ஜித் 1989 ல் கட்டப்பட்டது. இவ்வாறு 31 ஆண்டுகளுக்குப் பிறகு மஸ்ஜிது நூர் என்ற இரண்டாவது பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. அது காபூன் பகுதியில் கட்டப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் 2015 ஆம் ஆண்டு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி சென்று சேர்ந்தது. இந்த பகுதி குவேட்டேமாலாவிலுள்ள நமது தலைமையகத்திலிருந்து 328 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. 70 கிலோ மீட்டர் மலைப்பாதை வழியாகவும், பாதை குண்டும் குழியாகவும், சிறியதாகவும், மிகவும் அபாயகரமானதாகவும் உள்ளது.

2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அதன் பிறகு அல்லாஹ்வின் அருளால் இறை நியதி இவ்வாறு வெளிப்பட்டது. அங்கு பாதையும் அமைக்கப்பட்டது. மேலும் தப்போது அல்லாஹ்வின் அருளால் அந்த 70 கிலோ மீட்டர் வழிப்பாதையும் சிறந்ததாக ஆகி விட்டது. பாதையை விரிவுபடுத்துகின்ற பணியும் நடைபெற்று வருகின்றது. அந்த பள்ளிவாசலில் 170 தொழுகையாளிகளுக்கு இடம் உள்ளது. ஒரு மினாராவும் கட்டப்பட்டுள்ளது. அதன் உயரம் 8.5 மீட்டர் உயரமாகும். பள்ளிவாசலுடன் இரண்டு அடுக்கு மிஷன் ஹவுஸும் கட்டப்பட்டுள்ளது. கீழ் தளத்தில் அலுவலகமும், நூலகமும் கட்டப்பட்டுள்ளது. முதல் தளத்தில் தங்குமிடமும், ஜமாஅத் சமையலறையும் கட்டப்பட்டுள்ளது. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனியாக நமது பள்ளிவாசல்களில் இருப்பது போன்று வாஷ்ரூம் கட்டப்பட்டுள்ளது. இது உயரமான பகுதியாக இருப்பதால் தொலைவிலிருந்தே பள்ளிவாசலை காண முடிகின்றது.

நார்வேயில் கரிஸ்சான் என்ற இடத்தில் இந்த முறை ஒரு தேவாலயத்தின் கட்டடம் பள்ளாவாசலுக்காக வாங்கப்பட்டுள்ளது. அந்த நகரத்தில் ஜூலை மாதம் 2017 ஆம் ஆண்டு

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

இறந்தவரை உயிரூட்டுவது என்பதன் தத்துவமாவது, இறைவன் முன்னிலையில் துஆ செய்து ஓர் உயிரை திரும்ப வரவழைப்பதாகும். (மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 1, பக்கம் 114 பிரசுரம் 22 மார்ச் 1886)

A.Nasir Ahmad (மேலப்பாளையம்)

தொழுவதற்காகவும், கூட்டங்கள் நடத்துவதற்காகவும் ஒரு கட்டடம் வாங்கப்பட்டது. அந்த கட்டடம் ஒரு கம்பெனியின் அலுவலகமாக இருந்தது. அந்த கட்டடத்தை பள்ளிவாசலாக மாற்றுவதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு வரைபடம் தயாரிக்கும் பணி ஆரம்பமானது. மேலும் அது அரசாங்கத் துறையினரிடம் கொடுக்கப்பட்டது. அப்போது சுற்று வட்டாரத்திலுள்ள நகரவாசிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். பத்திரிகைகளிலும் இந்த எதிர்ப்பு பற்றி அதிகமான செய்திகள் வந்தன. சுமார் இரண்டு வருடங்களாக இந்த எதிர்ப்புகள் தொடர்ந்து இருந்து வந்தன.

இந்த கட்டடத்திற்கு அருகிலேயே ஒரு தேவாலயம் இருந்தது. அந்த தேவாலயத்தின் மக்களும் பள்ளிவாசல் கட்டுவதற்கு பெரும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் இறைவனின் நியதி இவ்வாறு வெளிப்பட்டது. எந்த தேவாலயத்தின் மக்கள் நம்மை எதிர்த்து வந்தனரோ அதன் நிர்வாகத்தால் தனது தேவாலயத்தை நிர்வகிக்க முடியாமல் போனது. அவர்கள் தேவாலயத்தை விற்பனை செய்வதற்கு முயற்சி செய்தனர். அவர்கள் கவுன்ஸிலரிடம், நாங்கள் தேவாலயத்தை விற்க விரும்புகின்றோம் என்று கூறினர். அதற்கு அந்த கவுன்ஸிலர், அஹ்மதிய்யா ஜமாஅத்தை தொடர்பு கொள்ளவும். ஒருவேளை அவர்கள் அதனை வாங்கிக் கொள்ளலாம் என்று அவர்களுக்கு ஆலோசனை கூறினார்.

அப்போது அவர்கள் நமது முபல்லிக்கிடம் தொடர்பு கொண்டனர். அதன் பிறகு முழுமையாக ஆய்வு செய்து அவர்கள் எனக்கு அறிக்கை அனுப்பினர். இங்கிருந்து எனது ஒப்புதல் கிடைத்த பிறகு தேவாலயத்தின் கட்டடம் பள்ளிவாசலுக்காக விலைக்கு வாங்கப்பட்டது. இவ்வாறு பிப்ரவரி மாதம் 25 ஆம் தேதி அல்லாஹ்வின் அருளால் தேவாலயத்தின் சாவி நமக்கு கிடைத்து விட்டது. பள்ளிவாசல் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த அதே தேவாலயம் தற்போது அல்லாஹ்வின் அருளால் மஸ்ஜிது மர்யம் என்ற ஜமாஅத்தின் பள்ளிவாசலாக மாறி விட்டது. அரசாங்க செலவுகள் உட்பட சுமார் 10 மில்லியன் குரோனர் அளவில் செலவாகியுள்ளது.

மலாவியில் முதலாவது பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. மாலன் என்ற ஒரு மாவட்டம் உள்ளது. முதலாவது பள்ளிவாசல் இங்குதான் கட்டப்பட்டுள்ளது.

தன்ஸானிய்யா அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: பள்ளிவாசல் மற்றும் மிஷன் ஹவுஸ் கட்டப்படுவதற்கு முன்பு உள்ளூர்வாசிகளுக்கு நம்பிக்கையூட்டப்பட்டது. அவர்கள் அனைவரும் தமது கிராமத்தில் பள்ளிவாசல் கட்டப்படுவதால் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் சில தீய சக்திகள் அங்கு தாக்குதல் நடத்தினர். கட்டுமானப் பொருட்களை எடுத்துக் கொண்டு சென்று விட்டனர். அதன் காரணமாக காவல் துறையின் கட்டளையினால் சில நாட்கள் கட்டுமானப் பணி தடைபட்டது. மீண்டும் பணி ஆரம்பமானபோது கிராமவாசிகளுக்கு நிலவரம் பற்றி கூறப்பட்டது. நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நிலைமையை எதிர்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. மீண்டும் அதுபோன்ற சம்பவங்கள் நிலைபெறாமல் இருக்க அவர்களுக்கு கூறப்பட்டது. எனவே அவர்கள் அனைவரும் கூறினர். உண்மையாகவே இந்த மஸ்ஜிது எங்களது கிராமத்திற்கு ஓர் அருட்கொடையை விட குறைவானதல்ல. நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அதன் கட்டுமானத்தை உறுதி செய்தவாறு எந்த விரும்பத்தகாத சம்பவங்களும் நடைபெற விட மாட்டோம் என்று உறுதி அளித்தனர்.

இவ்வாறு அல்லாஹ்வின் அருளால் அங்குள்ள ஜமாஅத் உறுப்பினர்கள் சுற்றுவட்டாரத்திலுள்ள தப்லீக் தொடர்புகளை அதிகரித்துக் கொண்டார்கள். மேலும் அஹ்மதிய்யத்தின் அமைதி மற்றும் நேசம் நிறைந்த உண்மை இஸ்லாத்தின் போதனைகளை பற்றி மக்களுக்கு எடுத்துரைத்தார்கள். எவ்வாறிருப்பினும் பள்ளிவாசல் முழுமையடைந்தது. அதன் திறப்பு விழாவும் நடத்தப்பட்டது. அப்போது ஒட்டு மொத்தமாக அங்கு சுமார் 450 முதல் 500 நபர்கள் பங்கு பெற்றனர். அதில் அந்த பகுதியிலுள்ள பல்வேறு மண்டலங்களின் தலைவர்களும் அடங்குவர். போலீஸ் இன்ஸ்பக்டரும் அடங்குவார். மேலும் பள்ளிவாசலின் இமாமும் வந்திருந்தார்.

அந்த சந்தர்ப்பத்தில் அஹ்மதி அல்லாத பலர் வெளிப்படையாக இதைக்கூறினர். அதாவது எங்களுக்கு முதலில் அஹ்மதிகளைப் பற்றி அவர்கள் முஸ்லிம்கள் அல்ல; அவர்களின் வணக்க வழிமுறை முஸ்லிம்களிடமிருந்து வேறுபட்டதாகும் என்று தவறாக கூறப்பட்டிருந்தது. ஆனால் நாங்கள் இங்கு வந்து பார்த்தபோது நீங்கள் முஸ்லிம்கள் மட்டுமல்ல. மாறாக, ஏனைய முஸ்லிம்களையும் அமைதியுடன் வாழ்வதற்கு அறிவுரை செய்பவர்கள் என்ற உறுதி எங்களுக்கு ஏற்பட்டு விட்டது. இவ்வாறு பல்வேறு நிகழ்ச்சிகளின் விளைவாக அந்தப் பகுதியில் மூன்று கிராமங்களில் ஓராயிரம் நபர்கள் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். அதில் பல மண்டலங்களைச் சார்ந்த தலைவர்களும் அடங்குவர்.

பைஅத்துல் ஆஃபியா மெக்ஸிகோவின் தலைநகரத்தில் அமைந்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு தலைமையகத்திற்காக ஒரு கட்டடம் வாங்கப்பட்டது. இதுவே மெக்ஸிகோவில் ஜமாஅத்திற்காக முதல் முறையாக வாங்கப்பட்ட சொத்தாகும். இந்த கட்டடம் மூன்று தளங்களைக் கொண்டது. அதன் கீழ்த்தளம் பள்ளிவாசலுக்காக ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது. அதில் ஆண்கள், பெண்கள் இருவருக்கும் தொழுவதற்கான ஹால் ஒன்று உள்ளது. நூலகம் உள்ளது. ஜமாஅத் அலுவலகம் உள்ளது. சில அறைகள் உள்ளன. அது பல்வேறு வகுப்புகள் நடைபெறுவதற்காக பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாவது தளம், முரப்பி சாஹிபின் தங்குமிடமாகும். மூன்றாவது தளம், எதிர்காலத்தில் ஏற்படும் தேவைகளைப் பொருத்து அது பயன்படும்.

பெலிஸ் மற்றும் வேறு சில இடங்களிலும் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வருகின்றன. விரைவில் இன்ஷா அல்லாஹ் அதன் பணிகள் முழுமையடைந்து விடும். எவையெல்லாம் கட்டப்பட்டு வருகின்றனவோ அவை ஏறக்குறைய பணி நிறைவடையும் நிலையில் உள்ளன. அவற்றைப் பற்றி நான் கூறவில்லை.

மாலி அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: டேமா என்ற ஒரு ஜமாஅத் நமது தலைமையகமான பம்பாகோ என்ற இடத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இடமாகும். அடங்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பள்ளிவாசல் கட்டுமானப் பணி ஆரம்பமானது. அதன் பணி இறுதி கட்டத்தில் இருந்தது. மினாராவின் பணிகளும் இறுதி கட்டத்தில் இருந்தன. அப்போது பள்ளிவாசலின் கட்டுமானப் பணியை நிறுத்தி விடுங்கள் என்று கிராமத்தின் தலைவர் சார்பாக கூறப்பட்டது. எதிர்ப்பின் காரணமாக தவறான விஷயங்களை மக்கள் கிராமத்தின் தலைவர் மற்றும் மேயரிடம் கூறியிருந்தனர். எவ்வாறிருப்பினும் கட்டுமானப் பணி நிறுத்தப்பட்டது. மூன்று ஆண்டுகள் வரை முயற்சிகள் செய்யப்பட்டன. இறுதியில் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தொடர்புகள் மற்றும் பல்வேறு வழிமுறைகளின் மூலமாக அந்த தலைவரை சமாதானப்படுத்திய பிறகு பள்ளிவாசல் கட்டுவதற்கு நமக்கு அனுமதி கிடைத்தது. கிராமத்தின் தலைவர் மிகவும்

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறைவனின் அருளாலும் உபகாரத்தாலும் பரக்கத்தாலும் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் அருளாலும் இந்த எளியவனின் துஆவை இறைவன் ஏற்றுக் கொண்டு ஓர் அருளுக்குரிய ரூஹை அனுப்புவதாக வாக்களித்தான்.

(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 1, பக்கம் 115 பிரசுரம் 22 மார்ச் 1886)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

பாராட்டினார். நீங்கள் மூன்று ஆண்டு வரை மிகவும் பொறுமையுடன் செயல்பட்டீர்கள். நீங்கள் விரும்பியிருந்தால் என்னை விட பெரிய நபர்களை தொடர்பு கொண்டு பள்ளிவாசல்களை கட்டியிருக்கலாம் என்று கூறினார்.

அவர் வஹ்ஹாபிகளின் உதாரணத்தையும் கொடுத்தார். அவர்களும் இதுபோன்றே தடுக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் தனது சில தொடர்புகளை பயன்படுத்தி பள்ளிவாசலை கட்டி முடித்து விட்டனர். அதேபோன்று நீங்களும் செய்திருக்கலாம். ஆனால் நீங்கள் பொறுமையை மேற்கொண்டீர்கள். இதன் காரணமாக உங்கள் மீதான மதிப்பு அதிகரித்து விட்டது. அந்த கிராமத்தின் தலைவரும் மற்றும் துணை தலைவர்களும் நாங்கள் மிக தாமதமாக உங்களுக்கு அனுமதி தருகின்றோம் என்று கூறி அதற்காக மீண்டும் மீண்டும் மன்னிப்பு கேட்டனர். நீங்கள் உங்களது பள்ளிவாசல் பணியை முழுமை செய்யுங்கள். தொழுகையை ஆரம்பியுங்கள். நாங்கள் இதற்கு அனுமதி வழங்க ஒன்றுபட்ட முடிவை எடுத்திருக்கின்றோம் என்றும் அவர்கள் கூறினர். இப்போது அல்லாஹ்வின் அருளால் அங்கு முறையாக அந்த பள்ளிவாசலில் தொழுகைகளும் ஆரம்பமாகி விட்டன.

தன்ஸானிய்யா அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: அங்குள்ள ஒரு மண்டலத்தில் இரண்டு ஜமாஅத்துகளில் இந்த வருடம் அல்லாஹ்வின் அருளால் பள்ளிவாசல் கட்டுவதற்குரிய நற்பாக்கியம் கிடைத்துள்ளது. பள்ளிவாசல் கட்டுமானத்திற்கு முன்பு அருகிலுள்ள கிராமத்திலிருந்து சன்னி ஆலிம்கள் அங்கு வந்து அஹ்மதிய்யா ஜமாஅத் ஒரு சிறிய ஜமாஅத் ஆகும். அதற்கு பள்ளிவாசல் கட்டுகின்ற ஆற்றல் இல்லை என்று கூறி மக்களை வழிகெடுத்தனர்.

மேலும் அவர்கள் இவ்வாறும் கூறினர். இதற்கு முன்பு அருகிலுள்ள கிராமத்தில் இரண்டு பள்ளிவாசல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அதுவே நமக்கு போதுமானதாகும் என்றும் கூறினர். அவர்களால் எதையும் கட்ட முடியாது என்றும் கூறினர். ஆனால் மிகக் குறுதிய காலத்தில் பள்ளிவாசல் கட்டுமானப் பணி ஆரம்பமானதும் அவர்கள் ஆச்சரியத்திற்கு ஆளாகினர். மேலும் அஹ்மதிகளிடம் ஏதோ சிறப்பான வலிமை உள்ளது. அதன் காரணமாக இவ்வளவு குறைந்த காலத்தில் பெரிய அழகான பள்ளிவாசலை இவர்கள் கட்டி விட்டனர் என்று அவர்கள் கூறினர். ஆனால் நம்மால் இங்கு தொழுகின்ற நமது இடத்தில் ஒரு செங்கலைக்கூட நம்மால் வைக்க முடியவில்லை என்று கூறினர்.

அதன் பிறகு அவர்கள் வேறு சில வழிமுறைகளை கையாளத் தொடங்கினர். அஹ்மதிகளிடமிருந்து விலகி இருங்கள். அவர்கள் இந்த முழுப் பகுதியையும் கைப்பற்றிக் கொள்வார்கள். இவ்வாறு செய்து விடுவார்கள். அவ்வாறு செய்து விடுவார்கள். பள்ளிவாசல் கட்டுவார்கள். இதுவே அவர்களின் எண்ணமாகும் என்றெல்லாம் கூறி மக்களிடம் அச்சத்தை பரப்பினர். ஆனால் எவ்வாறிருப்பினும் மக்கள் அதனை எவ்வகையிலும் பொருட்படுத்தவில்லை.

பூர்கினா ஃபாஸோ ஜமாஅத்தின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: காரி என்ற ஜமாஅத்தில் பள்ளிவாசல் கட்டுமானப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்குள்ள ஒவ்வொரு நபரும் பள்ளிவாசல் கட்டுமானப் பணியில் பங்கு பெற்றுக் கொண்டிருந்தார். சந்தா கொடுக்கும்படி மக்களிடம் கூறப்பட்டு வந்தது. ஒவ்வொருவரும் தத்தமது நிலைக்கேற்ப அந்த நன்மையில் பங்கு பெற்றுக் கொண்டிருந்தார். ஒரு நாள் இரண்டு பெரிய வயதைக் கொண்ட அஹ்மதிகள் வந்தனர். அவர்களின் கையில் இரண்டு கோழி இருந்தன. கொஞ்சம் முட்டைகளையும் வைத்திருந்தனர். எங்களிடம் இந்த இரண்டு கோழிகளும், முட்டைகளும் மட்டுமே இருக்கின்றது. இதனை பள்ளிவாசலுக்கான சந்தாவாக எங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். இந்த நல்ல பணியில் நாங்களும் பங்கு கொள்ள முடியும் என்று கூறினர். எனவே முஅல்லிம் சாஹிப் அவர்களும் அவர்களுக்கு அதற்குரிய ரஸீதை கொடுத்தனர்.

இன்றிலிருந்து 90 அல்லது 100 ஆண்டுகளுக்கு முன்பு காதியானி ஏழை மக்கள் நிலைநாட்டிய மரபை 100 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றும் கூட ஆப்ரிக்க ஏழை மக்கள் நிலைநாட்டி வருகின்றனர். ஒருவர் அறிவுக் கண்களைக் கொண்டு கண்டால் மேலும் அவரிடம் நற்பாக்கியமும் இருக்குமென்றால் இது உண்மை இல்லாமல் வேறு என்ன என்பதை அந்நிலையில் அவரே சுயமே அறிந்து கொள்வார். அல்லாஹ் சுயமாக மக்களின் உள்ளங்களில் தியாகம் செய்வதற்கு எவ்வாறு ஊக்கத்தை ஏற்படுத்துகின்றான் என்பதையும் அவர் அறிந்து கொள்வார்.

தன்ஸானிய்யாவின் ரேங்கா மண்டலத்தின் முஅல்லிம் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சில காதிம்களுடன் நான் அருகிலுள்ள ஒரு கிராமத்திற்கு சென்றேன். உள்ளூர் அரசாங்கத்தின் அனுமதியுடன் பொது இடத்தில் மதியம் 1 மணி முதல் மாலை 6 மணி வரை தப்லீக் சொற்பொழிவை நிகழ்த்தினேன். சொற்பொழிவிற்குப் பிறகு பார்வையாளர்களின் கேள்விக்கு பதில் கொடுக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியின் இறுதியில் ஹலீமா சாயிபா என்ற 72 வயதுடைய பெண்மணி தனது கைகளில் பைல் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தார்.

மேலும் நான் முஸ்லிம் ஆவேன். ஒரு நீண்ட காலமாக இங்கு வசித்து வருகின்றேன். நான் ஒருபோதும் இஸ்லாத்தின் பிரச்சாரத்திற்காக எவரும் இங்கு வந்ததாக நான் கண்டதில்லை என்று கூறினார். மேலும் தனது கைகளிலுள்ள கோப்பை முஅல்லிம் சாஹிபிடம் கொடுத்து இது எனது வீட்டின் பத்திரமாகும். உங்களது ஜமாஅத் இங்கு ஆயத்தமானதுடன் இங்கு நீங்கள் பள்ளிவாசல் கட்ட விரும்பினால் இதோ எனது இடம் உள்ளது. இதற்கான இந்த சொத்தை நான் உங்களுக்கு கொடுக்கின்றேன் என்று அவர் கூறினார்.

எனவே தற்போது அங்கு ஜமாஅத் உறுப்பினர்களின் வகாரே அமல் மூலமாக பள்ளிவாசல் கட்டுமானம் ஆரம்பமாகி விட்டது. செங்கற்கள் எல்லாம் ஆயத்தமாகி விட்டன. அங்கு அவர்கள் செய்கின்ற பணிகளில் அந்த மூதாட்டின் மகனும் பங்கு பெற்று இருக்கின்றார். இவ்வாறு அல்லாஹ் நல்லியல்பு படைத்த மக்களின் உள்ளங்களில் எண்ணங்களை போடுகின்றான். அவர்கள் உதவியாளர்களாக ஆகிவிடுகின்றனர்.

பூர்கினா ஃபாஸோவில் காரி என்ற ஜமாஅத் உள்ளது. அங்கு ஒரு ஜீனத் சாஹிபா என்ற பெண்மணி இருக்கின்றார். அவர் கூறுகின்றார். நான் BA தேர்வில் வெற்றி பெற்ற பிறகு இரண்டு ஆண்டுகள் வரை செவிலியராக ஆகுவதற்கு தேர்வு எழுதி வந்தேன். ஆனால் என்னால் வெற்றி பெற முடியவில்லை. நானும் எனது கணவரும் ஒரு தனியார் நர்ஸிங் ஸ்கூலில் அட்மிஷன் வேண்டி பணத்தை ஒன்றை சேர்க்க ஆரம்பித்தோம். இதற்கிடையில் நான் தேர்வுகளும் எழுதி வந்தேன். ஆனால் நான் தேர்வாகி விடுவேன் என்ற நம்பிக்கை இருக்கவில்லை.

இதற்கிடையில் காரி என்ற இடத்தில் பள்ளிவாசல் கட்டுவதற்காக சந்தா கேட்கப்பட்டது. கல்விக்காக சேர்த்து வைத்திருந்த தொகையை சந்தாவாக கொடுத்து விட்டோம். அட்மிஷன் தொடர்பான எண்ணத்தை சிறிது காலத்திற்கு கைவிட்டு விட்டோம். இரண்டு வாரங்கள் கூட கழியவில்லை. எனக்கு அரசாங்கத்தின் சுகாதாரத் துறையிலிருந்து அழைப்பு வந்தது. நீங்கள் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். உங்களது அனைத்து செலவையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும் என்று என்னிடம் கூறப்பட்டது. இவ்வாறு அல்லாஹ் மக்களின் ஈமானை அதிகரிப்பதற்குரிய ஏற்பாட்டை செய்கின்றான்.

அல்லாஹ்வின் அருளால் இந்த வருடம் 97 மிஷன் ஹவுஸ்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. மிஷன் ஹவுஸ் அல்லது தப்லீக் சென்டரின் எண்ணிக்கையில் கானா முதலிடத்தில் உள்ளது. அடுத்து இந்தோநேஷியாவும் அடுத்து இந்தியாவும் அதன் பிறகு சிரோலியோனும் உள்ளன. பின்னர் கோங்கோஷா, பிரேஸில், பெர்கினோபாஸோ, ஐவெரிகோஸ்ட், மாலி ஆகிய நாடுகள் மட்டுமின்றி இன்னும் பல நாடுகள் உள்ளன. ஆஸ்திரேலியா,

பங்களாதேஷ், கனடா, கேம்பியா, குவேட்டேமோலா, மலாவி, நார்வே, டோங்கா, துருக்கி இங்கெல்லாம் தல ஒரு மிஷன் ஹவுஸ்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தன்ஸானிய்யாவின் சீமேவர் மண்டலத்தின் முஅல்லிம் சாஹிப் எழுதுகின்றார்: கடந்த வருடம் ஏற்படுத்தப்பட்ட ஜமாஅத்துகளில் இந்த வருடம் பள்ளிவாசல்கள் மற்றும் மிஷன் ஹவுஸ்கள் கட்டப்பட்டன. இதற்கிடையில் யாருக்காக இந்த வீடு கட்டப்பட்டு வருகிறது என்று ஒரு கிறித்தவ பாதிரி கேட்டார். இது ஜமாஅத்தின் முஅல்லிம் சாஹிபின் தங்குமிடமாகும் என்று கூறப்பட்டது.

அப்போது அவர் மிகவும் ஆச்சரியத்துடன் கூறினார்: இந்த கிராமங்களில் கிறித்தவர்களின் ஆறு தேவாலயங்கள் உள்ளன. பெரும்பாலான பிரிவுகள் ஒரு நீண்ட காலமாக இந்த கிராமங்களில் வசித்து வருகின்றன. இவர்களில் எவருக்கும் தங்களின் பாதிரியாருக்காக தங்குமிடம் கட்டுவதற்கான நற்பாக்கியம் கிடைக்கவில்லை. நிச்சயமாக நீங்கள் மார்க்கத் தலைவர்களை கண்ணியப்படுத்தி மதிப்பளிக்கின்றீர்கள். மேலும் எல்லாரிடத்திலும் அன்பு; எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்ற உங்களின் முழக்கத்திற்கேற்ப அமல் செய்கின்றீர்கள். இந்த முன்னுதாரணத்தை மற்றவர்களும் பின்பற்ற வேண்டும் என்று அவர் கூறினார்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சிறப்புமிக்க ஒரு தனித்தன்மை வகாரே அமல் ஆகும். இந்த வருடம் ஆப்ரிக்காவின் பல்வேறு நாடுகளில் பள்ளிவாசல்களும், மிஷன் ஹவுஸ்களும் கட்டப்பட்டுள்ளன. அதில் 148 நாடுகளிலிருந்து கிடைக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் 114 நாடுகளில் மொத்தம் 51111 வகாரே அமல்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த வகாரே அமல் மூலமாக 52,13,000 டாலர்கள் சேமிக்கப்பட்டுள்ளன. இப்போது ஆப்ரிக்காவில் கட்டப்பட்டுள்ள பள்ளிவாசல்களையும், அதன் செலவுகளையும் பாருங்கள். அதன் பொருள் என்னவென்றால், வகாரே அமல் மூலமாக சேமிக்கப்பட்டுள்ள பணத்தைக் கொண்டு மேலும் பத்து பள்ளிவாசல்களை கட்டுவதற்கான நற்பாக்கியத்தை அல்லாஹ் வழங்கி இருக்கின்றான். இவ்வாறு அல்லாஹ் நமது பணத்திலும் பரக்கத்தை வழங்குகின்றான்.

தலைமையகப் பிரதிநிதிகளின் சுற்றுப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. உலகின் பல்வேறு நாடுகளிலும் நடந்தன. அங்கு தலைமையக பிரதிநிதிகள் சென்றனர். அதன் விவரங்கள் நீண்டதாகும். அதை நான் விட்டு விடுகின்றேன். அல்லாஹ்வின் அருளால் அங்கு நேர்மறையான தாக்கம் அவர்களின் சுற்றுப் பயணத்தால் ஏற்பட்டது.

ரகீம் அச்சகம் மூலமாகவும் பணி நடந்து வருகிறது. இதில் 3,60,240 புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி மார்க்க ஒப்பீட்டிற்கான அந்நுஸ்ரத் என்ற பத்திரிகையும், வக்ஃபே நவ்விற்கான மர்யம், இஸ்மாயீல் பத்திரிகையும், அதுமட்டுமின்றி பிரசுரங்கள் அச்சிடும் பணிகளும் நடைபெறுகின்றன.

நான் கூறியதுபோன்று இந்திய ஜமாஅத் காதியான் வெளியீட்டுத் துறை மிகவும் உழைப்புடன் பணி செய்துள்ளது. அதேபோன்று அங்கு அச்சகத்தின் உதவிக்காக துருக்கியைச் சார்ந்த முஹம்மது சாஹிப் என்ற அஹ்மதி நண்பரும் அச்சகப் பணியில் மிகவும் உதவி செய்துள்ளார். பாகிஸ்தானில் நமது வழிப்பாதையில் திருக்குர்ஆனை வெளியிடுவதற்கும், ஓதுவதற்கும் அதனை வைப்பதற்கும் எந்த அளவுக்கு தடைகள் ஏற்படுத்தப்படுகின்றதோ அல்லாஹ் அதை விட அதிகமாக நமக்கு சிறந்த வழிகளை திறந்து கொண்டே செல்கின்றான். தற்போது இங்கிலாந்தின் மேற்பார்வையில் ரகீம் அச்சகம் மூலமாக ஆப்ரிக்காவின் 8 நாடுகளில் அதாவது கானா, நைஜீரியா, தன்ஸானிய்யா, சிரோலியோன், ஐவெரிகோஸ்ட், பெர்கினோபோஸோ, பெனின் மற்றும் கேம்பியா ஆகிய இடங்களில் அச்சகப் பணிகள் நடைபெறுகின்றன. அவர்களுக்கு தேவையான உதவிகளும் செய்யப்பட்டுள்ளன. அங்கு அவர்கள் வெளியிட்டுள்ள அவர்களின் புத்தகங்களின் எண்ணிக்கை 6,12,000 ஐ விட அதிகமாகும்.

அதுமட்டுமின்றி பத்திரிகைகள், தப்லீக் பிரசுரங்கள் ஆகியவையும் அச்சிடப்பட்டுள்ளன. அதன் எண்ணிக்கை 94,50,000 ஆகும். இதற்கிடையில் கேம்பியாவில் தனியார் பணிகள் மட்டுமின்றி கேம்பிய அரசாங்கத்தின் சுகாதாரத் துறைக்காக கோவிட் பற்றிய விழிப்புணர்வுக்காக பெரும் எண்ணிக்கையில் தற்காப்பு வழிமுறைகளை உள்ளடக்கிய பிரசுரங்களை அச்சிட கேம்பிய அரசாங்கம் கேட்டுக் கொண்டது. ஏனென்றால் மற்ற அச்சகங்கள் மூடப்பட்டிருந்தன. எனவே அரசாங்கம் நம்மை தொடர்பு கொண்டு அதனை அச்சிட்டது. அவர்களுக்கு உதவி செய்யப்பட்டது. வகாலத் இஷாஅத் துறை சார்பாக 93 நாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கையின் அடிப்படையில் 42 மொழிகளில் 42,56,659 எண்ணிக்கையில் 407 புத்தகங்கள் மற்றும் பிரசுரங்களும் அச்சிடப்பட்டுள்ளன.

**பல்வேறு நாடுகளில் உள்ளூர் அளவில் ஜமாஅத் பத்திரிகைகளின் வெளியீடு**

தற்போது உலகம் முழுவதும் 29 மொழிகளில் கல்வி, தர்பிய்யத் மற்றும் அறிவார்ந்த கட்டுரைகளை உள்ளடக்கிய 94 வகையான பத்திரிகைகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

வகாலத் இஷாஅத் அவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற அறிக்கையின் அடிப்படையில் இங்கு 24 மொழிகளில் 1,90,000 ஐ விட அதிகமான எண்ணிக்கையில் புத்தகங்கள் உலகின் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

**வகாலத் தஸ்னீஃப் யூ.கே**

இந்த வருடம் திருக்குர்ஆனின் இத்தாலி மொழியாக்கத்தின் ரிவிய்யூ பணிகள் முடிவடைந்து விட்டன. அதன் கோப்புகளும் அச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டது. மேலும் இந்த வருடம் சஹீஹ் புகாரியின் மொழியாக்கம் மற்றும் விரிவுரையின் 11 தொகுதிகள் யூ.கேவில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஈஜாஸே அஹ்மதி என்ற புத்தகத்தின் ஆங்கில மொழியாக்கம் இந்த வருடம் அச்சிடப்பட்டுள்ளது. இத்மாமே ஹுஜ்ஜா மற்றும் ஜங்கே முகத்தஸ் ஆகிய நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பின் பணிகள் நிறைவடைந்து விட்டன. இன்ஷா அல்லாஹ் விரைவில் அந்த புத்தகமும் அச்சிடப்படுவதற்கு அனுப்பி வைக்கப்படும். ரூஹானி கஸாயினின் தொகுதி 9 மட்டுமின்றி மற்ற 22 தொகுதிகளும் இங்கிலாந்திலிருந்து அச்சிடப்படுகின்றது. 10 வது தொகுதியும் இன்ஷா அல்லாஹ் ஆரம்பமாகி விடும். எனவே 23 தொகுதிகளும் விரைவில் வந்து விடும்.

உக்ரைன் நாட்டிலிருந்து சர்கயி தமீத்தரு என்ற ஒரு நண்பர் கடந்த வருடம் இங்கு ஜல்ஸாவில் வந்திருந்தார். அவர் அஹ்மதி கிடையாது. ஆனால் அவர் ஜல்ஸாவில் வந்திருந்தபோது உலகளாவிய பைஅத்தில் பங்கு பெற்று பிறகு பைஅத் செய்து விட்டார். அவர் நல்ல ஒரு பத்திரிகையாளர் ஆவார். மார்க்க அறிவுத் துறையில் மிகச் சிறந்த வல்லுநர் ஆவார். அவர் இங்கு வந்து என்னை சந்தித்தார். அப்போது நான் அவரிடம் நீங்கள் இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானத்தை படியுங்கள். நீங்கள் கற்றறிந்த வல்லுநர் ஆவீர்கள். பின்னர் அது குறித்து உங்களுடைய கருத்தையும் தெரியப்படுத்துங்கள் என்று நான் கூறினேன்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் கொடுங்கோல் அரசர்களுடன் தொடர்புபடுத்தி கலீஃபா என்ற சொல்லைக் கூற விரும்பவில்லை. ஏனென்றால், கலீஃபா உண்மையில் ரஸூலின் நிழலாக இருக்கின்றார். (ஷஹாதத்துல் குர்ஆன் ரூஹானி கஸாயின் தொகுதி 6, பக்கம் 353)

A.Basheer Ahmad, Sec.Waqf-e-jadid, Melapalayam

எனவே அவர் திரும்பிச் சென்று கூறுகின்றார்: நான் புத்தகத்தை படிக்கத் தொடங்கி விட்டேன். நான் ஒரே முறையில் முழு புத்தகத்தையும் படித்து முடித்து விட்டேன். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள், ஒரு மார்க்கத் தலைவர் மட்டுமல்ல. மாறாக, அறிவார்ந்த துறையில் ஒரு பெரும் ஆராய்ச்சியாளராக அன்னார் திகழ்ந்தார்கள் என்பதை நான் அதனை படித்து முடித்த பிறகு தெரிந்து கொண்டேன். நான் எனது வாழ்க்கையில் ஏராளமான புத்தகங்களைப் பற்றி கருத்து எழுதியுள்ளேன். ஆனால் அந்த புத்தகங்களிலிருந்து புதிதாக கருத்தை பெற்றதாக நான் உணரவில்லை. ஆயினும் இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானத்தை படித்ததன் விளைவாக எனது அறிவு வளர்ந்தது. இந்த புத்தகத்தின் கருத்தை நான் எனது அறிவின் எடை கொண்டு அளக்கவில்லை. மாறாக, எனது உள்ளம் மற்றும் ஆன்மா எனும் கண்ணாடியைக் கடந்து கருத்தை எழுதியுள்ளேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், இஸ்லாத்தின் மறுமலர்ச்சி மற்றும் முஸ்லிம் சமுதாயத்தின் சீர்த்திருத்தத்திற்காக அதிக அழுத்தம் தந்துள்ளார்கள். எந்தவொரு மார்க்கத்தின் சீர்திருத்ததும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இந்த அடிப்படையில் நாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தை ஆய்வு செய்து பார்த்தால் ஐரோப்பாவின் சீர்திருத்ததங்கள் ஆரம்பமாவதற்கு முன்பாக கிறித்தவத்தில் ஈமான் மற்றும் உறுதிப்பாட்டில் ஒரு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றாத வரை இஸ்லாத்தின் நிலையும் அப்படித்தான் இருந்தது.

அவர் கூறுகின்றார்: அந்த புத்தகத்தில் குறிப்பாக இயல்பு நிலை மற்றும் நல்லொழுக்க நிலைகளைப் பற்றி கூறப்பட்ட விஷயங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. நாம் நமது படைப்பின் அடிப்படை நோக்கத்தையும் இறைவன் படைப்பினங்களின் படைத்ததன் முக்கியத்துவத்தையும் அறிவது நம் அனைவருக்கும் மிகவும் அவசியமாகும். அதேபோன்று நல்லொழுக்கங்கள் மற்றும் அதன் அடிப்படையை புரிவதற்கும் முயற்சி செய்ய வேண்டும். தற்போதைய காலத்தில் மனிதனை உண்மையின் பாதையிலிருந்து விலக்கக்கூடிய வழிமுறைகள் மிகவும் அதிகரித்து விட்டன என்பதை நம்மில் பெரும்பாலோர் மறந்து விடுகின்றோம். எனவே நாம் அல்லாஹ்வின் படைப்பினத்திற்கு மதிப்பளிப்பது என்பது மிகவும் அவசியமாகும்.

நான் சொற்பொழிவின் கடைசியில் கூறியிருந்த வார்த்தை இதுவாகும். இந்த புத்தகத்தை படிப்பது தொடர்பாக நான் கூறிய வார்த்தைகள் சுட்டிக்காட்டி அவர் கூறுகின்றார்: இஸ்லாமிய உலகில் இஸ்லாம் தொடர்பாக நிலைநாட்டப்பட்டிருந்த தவறான சித்திரத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சீர்திருத்தினார்கள். தனது ஜமா அத்தையும் அவர்கள் சீர்திருத்தினார்கள்.

இதனை சுட்டிக்காட்டி அவர் கூறுகின்றார்: இஸ்லாமிய உலகில் இஸ்லாம் தொடர்பாக நிலைநாட்டப்பட்டிருந்த தவறான சித்திரத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சீர்திருத்தினார்கள். தனது ஜமா அத்தையும் அவர்கள் சீர்திருத்தினார்கள். நம்மில் ஒவ்வொருவரும் தமது குடும்பத்தையும், தனது சூழலையும், தனது நாட்டையும் சீர்படுத்தி விட்டால் அதன் விளைவாக அத்தகைய நபர் உலகின் ஈமானிய நிலையை சீர்ப்படுத்துவதற்கும் தகுதி பெற்றவராக ஆகிவிடுவார்.

பின்னர் கூறுகின்றார்: மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் காதியானி அவர்கள் இயல்பான நிலைகள் மற்றும் நல்லொழுக்க நிலைகளைப் பற்றி வழங்கியுள்ள விளக்கம் முற்றிலும் புதிய ஒன்றாகும். என்னைப் பொருத்தவரை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தான் முதல் முதலில் இந்த சொற்றொடரை பயன்படுத்தியுள்ளார்கள். மிகவும் உயர் தரமான மற்றும் பரிசுத்தமான முறையில் அன்னாருக்கு கற்றுத் தரப்பட்டுள்ளது. ஒரு தத்துவஞானி என்ற முறையில் இந்த புத்தகத்தை படித்ததன் மூலம் எனக்கு மிகவும் இன்பம் ஏற்பட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த புத்தகத்தை பெரும் எண்ணிக்கையில் வெளியிட வேண்டும். பல்வேறு மொழிகளிலும் மொழியாக்கம் செய்ய வேண்டும். அதன் மூலம் பெரும்பாலான மக்கள் இந்த புத்தகத்தை படித்து மார்க்கம், ஈமான், உண்மை ஆகியவற்றைப் பற்றி அதிகமாக தெரிந்து கொள்ள முடியும்.

நேபாளத்தில் ஒரு பேராசிரியர் இருந்தார். அவருக்கு அவர்கள் என்னுடைய பல்வேறு சொற்பொழிவுகளை உள்ளடக்கிய உலக நெருக்கடியும் அமைதிக்கான தீர்வும் என்ற நூலை அன்பளிப்பாக வழங்கினார்கள். அவர் கூறுகின்றார்: இந்த புத்தகம் தற்போதைய சூழலின் அடிப்படையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அந்த புத்தகத்தின் பல பாராகராஃப் மற்றும் வாக்கியங்களுக்குகீழ் அவர் அடையாளமிட்டுள்ளார்கள். நான் இந்த வாக்கியங்களை High Light செய்ய விரும்பியிருந்தேன். ஏனென்றால் இந்த விஷயங்களை உலகில் பரப்புவதற்கு மிக அதிக தேவை இருக்கிறது. முழு உலகிற்கு தேவையான பொன்னான வழிமுறைகள் இந்த புத்தகத்தில் கூறப்பட்டுள்ளன. இந்த புத்தகம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. எனது நண்பக்கும் படிப்பதற்காக இந்த புத்தகத்தை கொடுப்பேன் என்று அவர் கூறினார்.

இந்த ஒரு பேராசிரியர் மட்டுமல்ல. மற்றும் ஒரு பேராசிரியர் மற்றும் மருத்துவரான நேபாளைச் சார்ந்த கோவிந்த் சாஹிப் அவர்களும் இந்த புத்தகத்தைப் பற்றி கருத்து தெரிவித்துள்ளார். அவர் கூறுகின்றார்: நான் இந்த புத்தகத்தை படித்தேன். இன்று உலகில் ஊடகங்களின் காரணமாக முஸ்லிம்கள் தவறாக சித்தரிக்கப்படுகின்றனர். அதுபோன்ற நிலைகளில் ஒரு முஸ்லிம் தலைவர் முழு உலகிலும் அமைதியை நிலைநாட்ட முயற்சி செய்வது முஸ்லிம் அல்லாதவர்களுக்கு மிகவும் ஆச்சரியம் தரும் விஷயமாகும். உலகில் முஸ்லிம்களில் 72 பிரிவினர் உள்ளனர்.

மேலும் இஸ்ராயீலுடன் அவர்களுக்கு மார்க்கம் மற்றும் அரசியல் பகைமையும் உள்ளது. இதுபோன்ற நிலையில் ஒரு முஸ்லிம் தலைவரிடமிருந்து அமைதியை நிலைநாட்டுவதற்காக அங்குள்ள பிரதமருக்கு கடிதம் எழுதுவது மிகவும் தைரியமான காரியமாகும். அதேபோன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபா அவர்கள் ஈரானிய பிரதமருக்கும் கடிதம் எழுதியுள்ளார்கள். இதனால் நான் மிகுந்த தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளேன். உலக நெருக்கடி மற்றும் அமைதிக்கான வழியை ஆய்வு செய்கின்றபோது இந்த புத்தகத்தை படிக்கின்ற முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இஸ்லாத்தின் அமைதி நிறைந்த தூதுச் செய்தியை அறியவும், புரியவும் மிகவும் உதவியாக இருக்கும். மற்ற முஸ்லிம் பிரிவினர்களை விட அஹ்மதிய்யா ஜமாஅத் அமைதி தொடர்பாக உலகில் தனது செய்தியை முன் வைத்துள்ளது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வாதத்திற்கேற்ப திருக்குர்ஆனின் போதனையின்படி அமல் செய்வதன் மூலமாக மட்டுமே உலகில் அமைதியை நிலைநாட்ட முடியும். நிச்சயமாக இதனை மறுக்க முடியாது.

அடுத்து ஒரு நண்பர் நேபாளத்தில் நமது புத்தக அரங்கிற்கு வந்தார். இந்த புத்தகத்தைப் பார்த்து அவர் கூறினார்: இஸ்லாத்தில் போர் செய்வதற்கு ஏன்? எப்போது அனுமதி தரப்பட்டது என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர் கூறினார். இது முக்கியமான கேள்வியாகும். இதற்கான கேள்வியை நான் நீண்ட

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

முழு உலகிலுள்ளவர்களை விடவும் சிறப்பிற்குரிய முதன்மை நிலையில் இருக்கின்ற ரஸூல்மார்களின் இருப்பானது நிழலான முறையில் என்றென்றும் கியாமத் வரை நிலைத்திருக்க வேண்டும் என்று இறைவன் நாடியுள்ளான். இதற்காகவே இறைவன் கிலாஃபத்தை ஏற்படுத்தியுள்ளான். (ஷஹாதத்துல் குர்ஆன் ரூஹானி கஸாயின் தொகுதி 6, பக்கம் 353)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

காலமாக தேடி வந்தேன். இன்று எனக்கு அதற்கான பதில் இந்த புத்தகத்தில் கிடைத்து விட்டது.

அடுத்து ஜார்கண்ட் மாநிலம் இந்தியாவில் நடைபெற்ற ஒரு புத்தக கண்காட்சியில் இஸ்லாத்திற்கு எதிராக பகைமையான சிந்தனை கொண்ட நபர் ஒருவர் வந்தார். அவர் வந்தவுடன் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தொடர்பாக பல ஆட்சேபனைகளை செய்யத் தொடங்கினார். அவர் இஸ்லாத்திற்கு எதிரான புத்தகங்களையே படித்திருந்தார். அதன் காரணமாக அவர் ஆட்சேபனை செய்து கொண்டிருந்தார். அவருக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனை எடுத்துக் கூறப்பட்டபோது மிகவும் தாக்கத்திற்கு ஆளானார். மேலும் இன்று வரை எனக்கு இஸ்லாத்தைப் பற்றி சரியான அறிவு இல்லாமல் இருந்தது. இனி நான் உங்களது புத்தகங்களை படிப்பேன் என்று கூறினார். எனவே அவருக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டன. குறிப்பாக உலக நெருக்கடியும் அமைதிக்கான தீர்வும் என்ற புத்தகம் வழங்கப்பட்டது. அந்த நண்பர் அடுத்த நாள் மீண்டும் வந்தார். நான் இந்த புத்தகத்தின் சில பகுதியை படித்து விட்டேன். மிக நல்ல புத்தகம் ஆகும். எனது உள்ளத்திலிருந்த பல ஆட்சேபனைகள் நீங்கி விட்டன என்று கூறினார். தற்போது அவர் நமது நிரந்தர தொடர்பில் இருந்து வருகிறார்.

இதேபோன்று கரிபாத்தி முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: ஒவ்வொரு முஸ்லிமும் பிறரைக் கொலை செய்வதற்கு ஆயத்தமாகி விடுகின்றார் என்ற விஷயம் இங்குள்ள மக்களுக்கு கூறப்பட்டிருந்தது. ஆனால் தற்போது இது தவறான விஷயமாகும் என்பது பலருக்கு தெரிய வந்துள்ளது. எந்த அளவுக்கு என்றால் முஸ்லிம்களை ஏன் நமது நாட்டுக்குள் அனுமதித்தீர்கள்? அவர்களை உடனடியாக இங்கிருந்து வெளியேற்றுங்கள் என்று நாட்டின் அதிபரிடம் முறையீடு செய்யப்பட்டது. அப்போது நான் திருக்குர்ஆன் படித்துள்ளேன். இஸ்லாம் ஒரு அமைதி நிறைந்த மார்க்கமாகும். நான் ஒருபோதும் அவர்களை இங்கிருந்து வெளியேற்ற மாட்டேன் என்று அதிபர் கூறிவிட்டார்.

அல்ஹம்துலில்லாஹ். அதிபருடன் நடைபெற்ற சில சந்திப்புகளில் இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டிருந்தது. தற்போது அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும்தான் இந்த நாட்டில் இஸ்லாமிய போதனைகளை பரப்பிக் கொண்டிருக்கிறது.

அடுத்து ஷியான்கா மண்டலத்தின் சுற்றுப் பயணத்தைப் பற்றி மண்டல முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: அங்குள்ள சேர்மன் அவர்களுடன் சந்திப்பு நிகழ்ந்தது. அவர் மிகவும் அறிவுடையவராகவும், புரியும் திறன் கொண்டவராகவும் இருந்தார். ஆனால் நாத்திகவாதியாக இருந்தார். நான் அவரிடம் இறைவனை நம்புவது மற்றும் மார்க்கத்தின் அவசியம் பற்றி கூறினேன். நான் சமூகத்தில் மிகவும் மதிப்பிற்குரிய பதவியில் இருக்கின்றேன். எனக்கு இரண்டு மனைவிகள் உள்ளனர். பிள்ளைகளும் உள்ளனர். எனது வாழ்க்கை இறைவனை நம்பாமலேயே நல்ல முறையில் கழிகின்றது. எனக்கு இறைவன் அல்லது மார்க்கத்தை ஒப்புக் கொள்வதற்கான என்ன அவசியம் வந்து விட்டது என்று அவர் அந்த உரையாடலுக்கு மத்தியில் கேட்டார்.

அப்போது முபல்லிக் சாஹிப் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய இறை இருப்பிற்கான சான்றுகளை உள்ளடக்கிய புத்தகங்களை வழங்கினார். ஒவ்வொரு அஹ்மதியும் இந்த புத்தகத்தை படிக்க வேண்டும். பிறகு அவர் கூறினார்: நான் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ள விரும்புகின்றேன். அதற்கு முபல்லிக், இப்போதுதான் நீங்கள் மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற விஷயத்தை மறுத்து வந்தீர்கள். ஆனால் தற்போது அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதற்கு தயாராகி விட்டீர்களே என்று கேட்டேன்.

அதற்கு அவர், உங்களது கூற்றுக்களால் எனது மனம் திருப்தியடைந்து விட்டது. மார்க்கம் என்பது இறைவனைப் பற்றி இதுபோன்றுதான் எடுத்துரைக்கின்றது என்றால் பின்னர் கண்டிப்பாக அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார். பின்னர் அவருக்கு பைஅத் நிபந்தனைகள் படித்துக் காட்டப்பட்டன. தனது எட்டு பிள்ளைகளுடன் அஹ்மதிய்யத்தில் அவர் இணைந்து விட்டார். அல்ஹம்துலில்லாஹ் தொடர்ந்து ஜுமுஆ தொழுகையை தொழுவது மற்றும் அமைப்புடன் முழுமையான தொடர்பையும் அவர் வைத்துள்ளார்.

**பிரசுரங்களை விநியோகிக்கின்ற திட்டம்**

இந்த வருடம் 111 நாடுகளில் ஒட்டு மொத்தமாக 93,57,000 ஐ விட அதிகமான எண்ணிக்கையில் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அதன் மூலமாக 2,27,00,000 மக்கள் வரை தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது. இதில் மிக அதிகமாக ஜெர்மனி பணி செய்துள்ளது. 25,00,000 பிரசுரங்கள் விநியோகம் செய்துள்ளனர். அடுத்து யூ.கே 13 லட்சம், பின்னர் ஆஸ்திரேலிய 8 லட்சம், பின்னர் ஹாலந்து 4 லட்சம், பின்னர் பிரான்ஸ் 3 லட்சம், கனடா 3 லட்சம் இவ்வாறு மற்ற நாடுகள் பல லட்சம் பிரசுரங்கள் விநியோகம் செய்துள்ளனர்.

ஆப்ரிக்காவில் விநியோகிக்கப்பட்ட பிரசுரங்களில் தன்ஸானிய்யா முதலிடத்தில் உள்ளது. சுமார் 2 லட்சம் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அடுத்து பெனின். அவர்களும் ஏறக்குறைய அதே அளவில் விநியோகம் செய்துள்ளனர். அடுத்து பெர்கினோபாஸோ, நைஜீரியோ, கோங்கோஷாஷா ஆகிய நாடுகள் உள்ளன. இதுமட்டுமின்றி இந்தியாவில் 4,46,000 ஐ விட அதிகமான பிரசுரங்கள் விநியோகிப்பட்டுள்ளன.

தன்ஸானிய்யாவின் மாரா மண்டலத்தின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: ஒரு கிராமத்தின் மூன்று இளைஞர்கள் ஜமாஅத்தின் பிரசுரங்களை பிடித்து விட்டு தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டார்கள். ஜமாஅத்தைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தினார்கள். சிறிது காலம் தப்லீக்கின்கீழ் இருந்த பிறகு அவர்கள் தமது குடும்பத்துடன் பைஅத் செய்து விட்டார்கள். மேலும் தமது கிராமத்தில் பிரச்சாரத்தையும் தொடங்கி விட்டார்கள். அவர்களில் ஒரு இளைஞன், அந்த கிராமத்தின் சேர்மன் ஆக இருக்கின்றார். இறை அருளால் அங்கு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொண்டிருக்கின்றது. இதுவரை அந்த கிராமத்தில் 82 நபர்கள் பைஅத் செய்து விட்டனர். தப்லீக்கிற்கிடையில் எதிர்ப்பை எதிர்கொள்ள நேரிட்டது.

ஒரு நாள் அன்ஸார் அஸ்ஸினா என்ற பிரிவின் மல்லவி வந்தார். மக்களுக்கு மத்தியில் உரத்த குரலில் ஜமாஅத்திற்கு எதிராக மோசமாக பேசத் தொடங்கினார். இதுபோன்று கூச்சலிட்டு சண்டையிடுவது மார்க்கத் தலைவர்களுக்கு அழகல்ல என்று கூறி அந்த கிராமத்து வாசிகள் அவரது வாயை அடைத்தனர். அப்போது அவருக்கு முறையாக அறிவார்ந்த விவாதம் செய்வதற்கும் ஜமாஅத்தின் போதனைகளை சீர்தூக்கிப் பார்ப்பதற்கும் அழைப்பு கொடுக்கப்பட்டது. ஆதாரங்களால் வாயடைத்த பிறகு மீண்டும் மோசமாக ஏசிப் பேச தொடங்கினார்.

ஜமாஅத்தின் அமைதி நிறைந்த போதனைகள் மற்றும் அந்த சம்பவத்தின் தாக்கத்திற்கு ஆளாகி ஒரு முதியவர் தனது நிலத்தை ஜமாஅத்திற்கு ஜுமுஆ நடத்துவதற்காகவும் தொடர்ந்து ஜமாஅத் தொழுகைகளை நடத்துவதற்கும் வழங்கி விட்டார். இவ்வாறு ஏராளமான ஜமாஅத் அல்லாத பிள்ளைகள் நமது தர்பிய்யத் வகுப்புகளில் பங்கு பெற்று வருகின்றனர். அவர்களின் எதிர்ப்புகளே நமது தப்லீக்கிற்கு காரணியாக ஆகுகின்றது.

பிரான்ஸ் நாட்டின் ஒரு ஜமாஅத்தின் சதர் சாஹிப் எழுதுகின்றார்கள்: டோலோஸ் நகரத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் பஜாரில் நாங்கள் பிரசுரங்கள் வழங்கி வந்தோம். ஒரு பெண்மணி சிரித்தவாறு கூறினார்: நீங்கள் எனக்கு நாட்டை நேசிக்கவும் மற்றும் பர்தா தொடர்பாகவும் பிரசுரங்கள் வழங்கியுள்ளீர்கள். நான் அதனை படித்து விட்டேன். அதைப் படித்த

எனக்கு மிகவும் பிடித்துள்ளது. இன்றைய காலத்தில் இதுபோன்ற போதனைகளின் அவசியம் மிக அதிகம் உள்ளது என்று கூறியவாறு உங்களுக்கு எவ்வளவு பணம் கிடைக்கின்றது என்று கேட்டார். அதற்கு நாங்கள், அல்லாஹ்விற்காக மட்டுமே இந்த பணியை நாங்கள் செய்கின்றோம் என்று கூறியபோது அவர் பெரும் தாக்கத்திற்கு ஆளாகி விட்டார்.

**புத்தக அரங்குகளும் கண்காட்சிகளும்**

ஜமாஅத் புத்தகங்களின் கண்காட்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. கிடைத்த அறிக்கையின் அடிப்படையில் **7540** கண்காட்சிகள் மூலமாக **3** லட்சத்தி **44** ஆயிரம் நபர்கள் வரை இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது. இந்த வருடம் உலகம் முழுவதும் **1580** எண்ணிக்கையில் திருக்குர்ஆன் பல்வேறு மொழிகளில் மொழியாக்கத்துடன் அன்பளிப்பாக விருந்தினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி **5000**–ற்கும் அதிகமாக புக் ஸ்டால் மற்றும் கண்காட்சி மூலமாக **7** லட்சத்தி **64** ஆயிரத்தை விட அதிகமான நபர்கள் வரை தூதுச் செய்தியை சென்று சேர்க்கும் நற்பாக்கியமும் கிடைத்துள்ளது.

லட்டுயா முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: நமது புத்தக அரங்கில் ஒரு முதியவர் வந்தார். அரங்கினுள் நுழைந்தார். அங்கு ஸ்க்ரோம் படத்துடன் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. அதில் பல்வேறு இஸ்லாமிய கூற்றுகள் எழுதப்பட்டிருந்தன. எனது கூற்றுகளையும் அவர் கேட்டுக் கொண்டிருந்தார். அதே நேரத்தில் அதில் எழுதப்பட்டிருந்த வாசகங்களையும் அவர் படித்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு கூற்றையும் சைகை செய்து ரஷ்யன் மொழியில் மிக அருமை. முற்றிலும் சரி என்று கூறிக் கொண்டிருந்தார்.

அதேபோன்று இரண்டு பெண்களும் வந்திருந்தனர். அவர்கள் இரண்டு புத்தகங்களை வாங்கிச் சென்றனர். நீங்கள் மிக நல்ல பணிகளை செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்று பாராட்டி விட்டு சென்றார்கள்.

**2019** ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்திய நூருல் இஸ்லாம் துறையானது புத்தகக் கண்காட்சி ஒன்றில் பங்கு பெற்றது. அதில் ஒரு பெரிய இந்து மத அறிஞர் வந்தார். ஜெஹரிய்யா சாஹிப் அவரது பெயராகும். அவர் மார்க்கம் தொடர்பாக மிகவும் பரந்துபட்ட அறிவைப் பெற்றிருந்தார். அவர் பள்ளிக்கூடத்தை நடத்தி வருகின்றார். அவர் நமது அரங்கில் வந்து நின்றார். சில நிமிடங்களுக்குப் பிறகு திருக்குர்ஆனின் மீது ஆட்சேபனை செய்தார். மேலும் முஸ்லிம்களை தவிர்த்து மற்ற அனைவரையும் கொலை செய்துவிடும்படி கட்டளையிட்டிருப்பதாக அவர் கூறினார். திருக்குர்ஆன் உங்களுக்கு முன்னால் உள்ளது. எந்த இடத்தில் அந்த கட்டளை உள்ளது என்பதை நீங்களே கூறுங்கள் என்று அவரிடம் கூறப்பட்டது. அதற்கு அவர், நான் முழு குர்ஆனையும் படித்துள்ளேன். ஏதோவொரு இடத்தில் அது உள்ளது. தற்போது எனக்கு அது பற்றி தெரியவில்லை என்று கூறினார்.

எனவே அவருக்கு முன்னால் திருக்குர்ஆனின் போதனைகளும், அந்நியர்களுடன் அழகிய முறையில் நடப்பது தொடர்பான போதனைகளும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரிகளும் எடுத்துரைக்கப்பட்டன. இஸ்லாமிய போதனைகள் சில நிமிடங்கள் கேட்ட பிறகு நான் அரங்கிற்குள் அமர்ந்து இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆன் தொடர்பாக மேலும் பல விவரங்களை அறிய விரும்புகின்றேன் என்று கூறினார். எனவே சுமார் **2** மணி நேரம் வரை அவரது அனைத்து கேள்விகளுக்கும், ஆட்சேபனைகளுக்கும் திருப்திகரமான பதில் தரப்பட்டது. அதன் காரணமாக நான் இதுவரை இந்த அளவிற்கு திருப்திகரமான பதிலை கேட்டதில்லை என்று அவர் கூறினார்.

நான் இஸ்லாம் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு பல உலகாக்களிடம் சென்றிருக்கின்றேன். ஆனால் அவர்கள் அளித்த பதில் இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் மீது அன்பை ஏற்படுத்துவதற்கு பகரமாக வெறுப்பையே அதிகரிக்கச் செய்தது. என்னிடத்தில் எந்த அளவுக்கு வெறுப்பும், விஷமும் நிறைந்து விட்டது என்றால் இஸ்லாத்திற்கு எதிராக ஒரு டிவி சேனல் தொடங்க வேண்டும் என நானும் எனது நண்பர்கள் அனைவரும் இணைந்து முடிவெடுத்தோம். எனவே அது தொடர்பான பணிகளும் துவங்கி விட்டன. அதற்கான ரெக்கார்டிங்கும் நடந்து விட்டன. ஆனால் இப்போது நீங்கள் எனது உலகத்தையே மாற்றி விட்டீர்கள். அன்னார் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானார். மேலும் இன்றிலிருந்து இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனுக்கு எதிராக எதையும் பேச மாட்டேன் எனவும் இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆன் தொடர்பாக நான் பதிவு செய்த அந்த நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப மாட்டேன் என்றும் அவர் வாக்குறுதி அளித்தார். மாறாக, இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துரைப்பேன் என்றும் கூறினார்.

அஹ்மதிய்யா ஜமாஅத் இப்படி அழகிய முகத்தை காட்டி எதிரிகளையும் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை ஏற்றுக் கொள்ளச் செய்து கொண்டிருக்கிறது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்து மற்றும் அழகிய முன்மாதிரி பற்றியும் சரியான புரிதலை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் இஸ்லாத்தின் குத்தகைக்காரர்களான பெயர்தாங்கிய ஆலிம்கள் இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆன் மீது மற்றவர்களுக்கு வெறுப்பை உருவாக்கி வருகின்றனர். அதேபோன்று நமக்கு எதிராகவும் பேசி வருகின்றனர்.

ஆக்ரா புத்தகக் கண்காட்சியின்போது உள்ளூர் பத்திரிகையாளர் நமது அரங்கிற்கு வந்தார். அவருடன் கலந்துரையாடல் நடந்தது. அவர் தன்னையும் அறியாமல் சமுதாயத்தின் வேதனைமிகு நிலையை வெளிப்படுத்தினார். அப்போது அவருக்கு அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக செய்யப்படுகின்ற இஸ்லாமிய தொண்டு பற்றி எடுத்துக் கூறப்பட்டது. அதனால் அவர் மிகுந்த தாக்கத்திற்கு ஆளானார். மேலும் அந்த பணியில் தன்னால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்வதாக அவர் வாக்குறுதி அளித்தார். அவர் தனது தொடர்புகள் மூலமாக நமது தூதுச் செய்தியை ஏனைய மூன்று நியூஸ் சேனல்களில் ஒளிபரப்பு செய்ய வைத்தார். அதன் மூலம் லட்சக்கணக்கான மக்கள் வரை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூதுச் செய்தி சென்று சேர்ந்தது.

அஸ்ஸாமில் நடைபெற்ற புத்தக கண்காட்சியில் PHD பட்டம் பெற்ற மற்றும் திருக்குர்ஆனின் ஹாபிழ் ஆன ஆஃப்தாப் அஹ்மது சவுத்ரி அவர்கள் கலந்து கொண்டார்கள். அவருக்கு ஜமாஅத் பற்றி அறிமுகம் செய்யப்பட்டது. நீண்ட உரையாடல் நிகழ்ந்தது. அந்த உரையாடலின்போது மஸீஹின் மரணம் பற்றியும், ஜமாஅத்தின் கொள்கை பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. திருக்குர்ஆனிலிருந்தே மஸீஹின் மரணம் பற்றி எடுத்துக் கூறப்பட்டது. அப்போது அவர் நிச்சயமாக நான் திருக்குர்ஆனை மனனம் செய்தவன்தான். ஆனால் இதன் பக்கம் எனது எண்ணம் ஒருபோதும் செல்லவில்லை. ஆனால் நீங்கள் இது தொடர்பாக எனது கண்ணை திறந்து விட்டீர்கள். நான் பத்திரிகையில் இது தொடர்பாக கட்டுரைகள் எழுதுவேன் என்று கூறினார். மேலும் இந்த அனைத்து வசனங்களையும் பத்திரிகைகளில் இன்ஷா அல்லாஹ் வெளியிடுவேன். அஸ்ஸாமைச் சார்ந்த அனைத்து முஸ்லிம்களும் எனக்கு எதிராக ஆகிவிட்டாலும் கவலையில்லை என்று கூறினார்.

சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற அமைதி கருத்தரங்கு சந்தர்ப்பத்தின்போது மெஷல் ஃபஷல் என்ற பாதிரி ஒருவர் வந்தார். அவர் ஒரு தொண்டு நிறுவன அமைப்பின் தலைவர் ஆவார். அஹ்மதிய்யா ஜமாஅத் எனக்கு விருது ஒன்றை வழங்கியுள்ளது. அதற்காக நான் நன்றி செலுத்திக் கொள்கின்றேன். ஒரு முஸ்லிம் ஜமாஅத் ஒரு கிறித்தவ தொண்டு நிறுவனத்திற்கு அதன் பணிகளின் காரணமாக பரிசளிப்பது எனக்கு ஆச்சரியம் தந்தது. நீங்கள் அமைதியை பற்றி மட்டும் பேசவில்லை. அமைதியை நிலைநாட்டவும் விரும்புகின்றீர்கள் என்பதற்கு இந்த விருது ஒரு பெரும் சான்றாகும். ஒரு மரம் அதன் கனிகளால் கண்டறியப்படுகிறது. அதன் கனி என்பது உங்களின் இந்த அமைதிக் கருத்தரங்காகும்.

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 17 Sep 2020 Issue No. 38

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

அடுத்து சேம்பியாவின் முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் எழுதுகின்றார். அமைதிக் கருத்தரங்கில் வாழ்க்கையில் பல்வேறு துறைகளைச் சார்ந்த நபர்கள் பங்கு பெற்றனர். அதில் காவல் துறை அதிகாரிகள், உள்ளூர் நீதிமன்ற நீதிபதிகள், பல்வேறு தேவாலயங்களின் பாதிரிமார்கள் மற்றும் இதர பிரதிநிதிகளும் அடங்குவர். பள்ளிக்கூட ஆசிரியர்கள், உள்ளூர் மீடியாவின் பிரதிநிதிகளும் அடங்குவர். பாராளுமன்ற உறுப்பினர்களும் வந்திருந்தனர். அருகிலிருந்த ஜமாஅத் அல்லாத பள்ளிவாசலின் முஅல்லிமும் வந்திருந்தார். ஒரு தேவாலயத்தின் பாதிரியார் தனது எண்ணத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார். நாங்கள் ஒரு நீண்ட காலமாக இதுபோன்ற நிகழ்ச்சியை நடத்த எண்ணிக் கொண்டிருந்தோம். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த நிகழ்ச்சியை நடத்துவதில் எங்களை முந்திக் கொண்டது என்று கூறினார்.

சண்டிகரில் நடைபெற்ற அமைதிக் கருத்தரங்கின்போது உபைதுல்லாஹ் என்ற ஆப்கானிஸ்தானைச் சார்ந்த நண்பருக்கு ஜமாஅத்தைப் பற்றி அறிமுகம் செய்யப்பட்டது. அவரிடம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நபரைக் குறித்து நற்செய்தி வழங்கினார்களோ அவர்தான் இந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி என்று வாதம் செய்துள்ளார் என்று கூறப்பட்டது. மேலும் நீங்கள் ஆய்வு செய்யுங்கள். இன்னும் மஸீஹ் மற்றும் மஹ்தி வருவதற்கான நேரம் வரவில்லையா? என்று அவரிடம் கூறப்பட்டது. அப்போது அவரது முகம் சிவந்தது. நடுக்கத்திற்கு உள்ளானார். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வந்து விட்டாரா? இது உண்மையா? என்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டிருந்தார்.

பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வார்த்தைகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மை எடுத்துக் கூறப்பட்டது. அவர் மிகவும் உணர்வுப்பூர்வமாகி நமது அஹ்மதி நண்பரின் நெற்றியில் முத்தமிட்டார். உங்கள் மூலமாக உலகத்திற்கு எடுத்து வைக்கப்படும் இந்த போதனைதான் இஸ்லாத்தின் உண்மையான போதனையாகும் என்று கூறினார்.

பின்லாண்டிலிருந்து அங்குள்ள தேசிய சத்ர் சாஹிப் எழுதுகின்றார்கள்: அதில் வெளியுறவுத் துறையைச் சார்ந்த தூதரும், பாகிஸ்தானில் பின்லாண்டின் தூதராக பணியாற்றியவரும் பங்கு பெற்றனர். உங்களது இந்த கண்ணியமிகு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு எனக்கு உண்மையிலேயே மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது என்று கூறினார். நான் பாகிஸ்தானில் 1995 முதல் 1998 வரை இருந்துள்ளேன். நான் அங்கு தூதரக அதிகாரியாக இருந்துள்ளேன். என்னுடன் அந்த காலத்து அழகிய நினைவுகள் இப்போதும் உள்ளன. எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் மிக நெருங்கிய நண்பர்களாக அஹ்மதிய்யா சமுதாயத்தைச் சார்ந்த ஏராளமான தனித்தன்மை வாய்ந்த நபர்கள் உள்ளனர். அஹ்மதிகள் இந்த நாடு மற்றும் அதன் எல்லைகளைக் கடந்து அறிவார்ந்த மற்றும் பொருளாதார வெற்றியில் மிக முக்கிய பங்கு வகித்துள்ளனர். ஆங்கிலேயர்கள் ஆசிய கண்டத்தை ஆட்சி செய்தபோது அவர்களது அரசாங்கத்தின் மிகவும் பிரபலமான மற்றும் இராணுவ அதிகாரிகளில் பலர் அஹ்மதிய்யா சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருந்துள்ளனர். நான் இத்தாலி நாட்டிலும் தூதராக பணியாற்றியுள்ளேன். இத்தாலியில் அறிவியலின் மூன்றாவது உலகளாவிய அகாடமியைப் பற்றி அறிந்திருக்கின்றேன். அப்துல் ஸலாம் பாகிஸ்தானிய அறிவியல் அறிஞர் அவர்கள் அதனை துவக்கி வைத்தார்கள். நோபல் பரிசு பெறக்கூடிய நபர்களில் அன்னார் இஸ்லாமிய நாடுகளைச் சார்ந்தவர்களில் முதல் அறிவியல் நபராக இருந்தார்கள். இந்த நோபல் செய்திக்கான தகவல் பரவியபோது பாகிஸ்தானிய பத்திரிகைகளும், ரேடியோக்களும், டிவிகளும் அதிகமாக இந்த செய்தியை ஒளிபரப்பின. அவர் மிகவும் கண்ணியப்படுத்தப்பட்டார். ஆனால் அதன் பிறகு விரைவாக அவர் ஓர் அஹ்மதி ஆவார் என்பது தெரிய வந்தவுடன் அந்த அனைத்து பாராட்டுகளும், ஒளிபரப்பும் தடை செய்யப்பட்டது. 1996 ஆம் ஆண்டு அவர் மரணமடைந்ததும் பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப் மாநிலம் ரப்வா நகரத்தில் அவர் நல்லடக்கம் செய்யப்பட்டார். ஆனால் வெட்கத்திற்குரிய விஷயம் என்னவென்றால், அவருடைய கபரில் வைக்கப்பட்டிருந்த பலகையில் முஸ்லிம் என்ற சொல் அழிக்கப்பட்டது.

எவ்வாறிருப்பினும் அவர் அனைத்து எதிர்ப்புகளைப் பற்றியும் குறிப்பிட்டார். இன்றைய நாட்களில் வரலாற்று புத்தகங்களே மாற்றப்படுகின்றன. பிள்ளைகளின் மூளைகளிலிருந்து உண்மையான வரலாறு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாம் கூறினாலும் கூறாவிட்டாலும் உலகத்தின் படிப்பறிவு கொண்ட மக்கள் இதனை நன்கு அறிவார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் பாகிஸ்தானிற்காக என்ன என்ன தொண்டுகளை செய்துள்ளது என்பதை அவர்கள் அறிந்துள்ளனர். மேலும் பாகிஸ்தானில் அஹ்மதிகளுடன் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்பதையும் அவர்கள் அறிந்துள்ளனர். பாகிஸ்தானில் உருவாகுவதற்கு எதிரிகளாக இருந்தவர்கள் இன்று பாகிஸ்தானின் நிறுவனராக ஆகுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர்.

எவ்வாறிருப்பினும் ஒவ்வொரு பாகிஸ்தானி அஹ்மதியும் நாட்டின் நன்றியுணர்வுமிக்க குடிமகன்களாக இருந்தனர்; இன்ஷா அல்லாஹ் இனியும் இருப்பர். இந்த எதிரிகளின் முயற்சிகள் அனைத்தும் ஒரு நாள் காற்றில் சிதறடிக்கப்படும் என்ற நம்பிக்கை உள்ளது இன்ஷா அல்லாஹ். மேலும் அல்லாஹ்வுடைய உதவியும் ஒத்தாசையும் நம்முடன் இருக்கும் இன்ஷா அல்லாஹ். இப்போது இருக்கத்தான் செய்கிறது. அவர்களின் எண்ணங்களுக்கேற்ப ஜமாஅத் தற்போது அழிந்திருக்க வேண்டும். ஆனால் அல்லாஹ்தான் ஜமாஅத்தை பாதுகாத்து வருகின்றான்.

எவ்வாறிருப்பினும் நான் கூறிய சம்பவங்கள் அனைத்தும் இந்த அறிக்கையின் ஒரு பகுதியாகும். நான் கூறியதுபோன்று இந்த அறிக்கை ஜலஸாவின் இரண்டாவது நாளன்று கூறப்படுவதுண்டு. இந்த ஆண்டு ஜல்ஸா நடைபெறாத காரணத்தினால் நான் கூறியதுபோன்று இதனை இரண்டு பகுதிகளாக நான் எடுத்துரைக்க எண்ணியிருந்தேன். எனவே நிகழ்ச்சி திட்டமிடப்பட்டுள்ளது. ஞாயிறு மாலை 4 மணிக்கு சிறிய கூட்டத்திற்கு முன்பு ஜல்ஸாவைப் போன்று எஞ்சிய பகுதியை நான் எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ். இங்கு ஹாலிலும், முழு உலகிலும் ஆகூஹ மூலமாகவும் இதை செவிமடுத்துக் கொள்ளும். நடப்பு வருடத்தில் அல்லாஹ் ஜமாஅத்தின் மீது செய்த அருட்களைப் பற்றிய குறிப்பு அதில் எடுத்துரைக்கப்படும். எவ்வாறிருப்பினும் இந்த அறிக்கையிலிருந்து ஏராளமான சம்பவங்களை எனக்கு கைவிட நேரிட்டுள்ளது. இன்ஷா அல்லாஹ் எஞ்சிய பகுதி ஞாயிற்றுக்கிழமை எடுத்துரைக்கப்படும்.

தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad